
# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி

(தன்னாட்சி)

**மதுரை - 625 002.**

NAAC மறுதகுதி தரமதிப்பீட்டுக் குழுவினரால்
நான்காம் சுழற்சியில் “B++” மதிப்பிடப்பட்டுள்ளது.

**(CGPA of 2.85 on 4 point Scale)**



# கல்லூரி ஆண்டு மலர்

# 2024 - 2025

**MAGAZINE 60 - 2024 - 2025**

# ஆசிரியர் குழு

# ஆண்டு மலர் 2024 – 2025

தலைவர் : முனைவர் திருமதி **சு. வானதி,** எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,பி.எச்.டி.
முதல்வர்

உறுப்பினர்கள் :

முனைவர் திருமதி **தா.மோ. அமலா,** எம்.ஏ., எம். ஃபில்., பி.எச்.டி.
இணைப்பேராசியர் மற்றும் துறைத்தலைவர், ஆங்கிலத்துறை

முனைவர் திருமதி. **கி.பியூலா,** எம்.ஏ. எம்.ஃபில்., பி.எச்.டி.
இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை

முனைவர்.திருமதி **வே.பொன்மாரி,** எம்.ஏ.,எம்.ஃபில்., பி.எச்.டி.,
உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை

திருமதி **கா.சத்தியா,** M.A.,M.Phil.,B.Ed., B.A., (Hindi) P.G.Dip.in Yoga, PG.Dip.in Saiva Siddantha
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

மாணவ பேரவைத் தலைவி : செல்வி. **க.கலைபவித்ரா**
மூன்றாமாண்டு, விலங்கியல் துறை (ஆங்கில வழி )

# ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி

(தன்னாட்சி)

## மதுரை - 625 002.



நான் மாடக்கூடல் நற்றமிழ் மதுரையில், அன்னை மீனாட்சி பெயர் தாங்கிய எம் கல்லூரி, அரசின் ஆதரவால் 60 ஆண்டுகளாய் ஏழை எளிய கிராமப்புற மாணவியரின் கனவுகளின் திறவுகோலாய் திகழ்கின்றது. அறிவார்ந்த பேராசிரியர்கள், ஆழமாய் கற்கும் மாணவியர், அயராது உழைக்கும் அலுவலகப் பணியாளர்கள் இவர்களின் திறமை திரட்டு இம்மலர் ! மகளிர் கல்வி மணம் நுகர அழைக்கிறேன்.

அன்புடன்

கல்லூரி முதல்வர்

முனைவர். திருமதி. **கூ.வானதி**

எம்.எஸ்.சி., எம்.பில்., பி.எச்.டி

ஆசிரியடமிருந்து …

பொற்றாமரைக் குளத்துதித்த பொய்யாமொழிப் புலவனின் இரண்டடி, சேதுபதி பள்ளியில் ஒலித்த பாரதியின் சொல்லடி, கண்ணகி பிடித்த பெண்ணுரிமையின் சிலம்பொலியுடன் வற்றாத வைகைக் கரையினிலே கம்பீரமாய் உயர்ந்தே நிற்கிறது கவின்மிகு ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி .

மாதர் தம் முன்னேற்றத்திற்கு மாதவம் புரிந்திட்ட பாரதியின் கனவினை நனவாக்க 1965ல் இடப்பட்ட ஒரு சிறு விதை 15 துறைகளைக் கொண்ட நல்லதோர் விருட்சமாகி வருடந்தோறும் ஏறத்தாழ இரண்டாயிரம் கல்விக்கனிகளை நாடு நலம் பெற நல்குகிறது. 1998ல் தன்னாட்சி பெற்ற இக்கல்லூரி அறிவியலோடு அறவியலையும் மொழியோடு மனையியலையும் சரித்திரத்தோடு சாதனைகளையும் கணிதத்தோடு கணினியையும் வணிகவியலையும் வணிக நிர்வாகவியலையும் இளைய இந்தியாவிற்கு வழங்கி இனிய இந்தியாவை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. மேலும் மாணவிகளின் ஆய்வு தாகத்திற்கு வழிகாட்டும் ஒளிகாட்டியாகவும் இக்கல்லூரி திகழ்கிறது.

மீனாட்சி கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக் குழுவின் கீழ் இயங்கி வரும் பல குழுக்கள் சமுதாயச் சேவைகளை ஆற்றுவதோடு திறன் மேம்பாட்டுத் தேவைகளையும் ஆராய்ந்து சீரிய முறையில் செயலாற்றி 4ஆவது **NAAC** சுற்று தரமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்து **B++** பெற்றுள்ளது.

முன்னைப் பழமைக்கும், முடிவிலாப் பெருமைக்கும் உரிய எம் கல்லூரி 1965ல் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகளாக உலகளாவிய கல்வியின் போக்கு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றப்படும் பாடத்திட்டம், கொரோனா காலங்களிலும் இணைய வழியாக நடத்தப்பட்ட வகுப்புகளோடு, இணையவழி மென்பொருள் ஊக்கப்பயிற்சி வகுப்புகள், மாணவியரின் நலன் கருதி ஆற்றல் மிகு ஆசான்களின் வழியில் பன்முக வளர்ச்சிக்கென திறம்படச் செயல்படும் **NSS, NCC, YRC, Science Forum, Career Guidance Cell, Enterpreneurship Cell, NICHE Club** போன்ற திறன் வளர்க்கும் திட்டங்களின் துணையோடு செயல்பட்டு வருகிறது. . .

விவேகத்தில் மட்டுமல்ல எம்மங்கையர் வீரத்திலும் தீரம் கொண்டு, விளையாட்டிலும் தடம் பதித்து தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை வென்று பெருமை சேர்த்து வருகின்றனர்.

இந்தியா வல்லரசாக வழி சொன்ன கலாமின் மொழி பயின்ற எம்மாணவிகள் தங்கள் கனவின் கருவிற்கு உருகொடுத்து ஓவியமாக்கி உயிர் கொடுத்து காவியமாக்கிக் காண்பவரின் கருத்துக்கும் சிந்தைக்கும் புதுமையைப் பரிசாக்கியிருக்கிறார்கள். பக்கங்களை வாசித்துப் புதிய பரிமாணங்களை நேசிப்போம்,

ஆசிரியர் குழு

## 2024 - 2025 கல்வியாண்டின் ஆண்டறிக்கை

பெண்களின் உயர்கல்வியில் ஒப்பற்ற தடம் பதித்து வரும் எம் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் 2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

இக்கல்லூரி 1965ஆம் ஆண்டு 320 மாணவிகள், 13 பேராசியர்கள், 13 அலுவலகப் பணியாளர்களுடன் செயல்படத் துவங்கி, 60 ஆண்டுகளாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது. 2024-2025ஆம் கல்வியாண்டில் சுமார் 4700க்கு மேற்பட்ட மாணவியர்கள், 141 பேராசிரியர்கள், 1 நூலகர், 1 உடற்கல்வி இயக்குநர், 50 கௌரவ விரிவுரையாளர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் 22 பேருடனும், பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உள்பட 28 பேருடனும், மற்றும் 15 இளநிலை, 15 முதுநிலை, 4 ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுடன் இக்கல்லூரி தென் தமிழகத்தில் பெண்களுக்கான மாபெரும் அரசு கலைக்கல்லூரியாக, இரு சுழற்சிகளில் செயல்பட்டு வருகின்றது.

இக்கல்லூரி 1998ஆம் ஆண்டு தன்னாட்சி தகுதியினைப் பெற்றதுடன் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவினரால் நான்காம் சுழற்சியில் “B++” தரச்சான்றும் பெற்று “அறிவே ஆற்றல்” என்ற உன்னத நோக்கோடு பல்வேறு துறைகளில் தமது முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கிறது. அனைத்துத் துறைப் பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஒன்றிணைந்து நன்முறையில் கடமையாற்றி, இக்கல்லூரி மாட்சிமை நிறைந்த கல்லூரியாக உருவெடுக்க உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

இக்கல்லூரியின் செயல்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதில் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்ற நாள் (02.07.2018) முதல் இன்றுவரை முனைப்புடன் செயல்படும் முதல்வர், முனைவர் சூ.வானதி அவர்கள், சீராக வழிநடத்தும் துறைத்தலைவர்கள், மற்றும் அர்ப்பணிப்புடன் செயல்படும் பேராசிரியர்களின் பணி அளப்பரியது. மாணவியர் வளர்ச்சியில் கல்லூரிப் பேரவையின் பங்கு மகத்தானது. இக்கல்வியாண்டில் கல்லூரிப் பேரவை, முதல்வர் முனைவர்.சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.சு.சந்திரா அவர்களைப் பேரவைத் துணைத்தலைவராகவும் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பேரவையின் மாணவப் பிரதிநிதியாக விலங்கியல்துறை மூன்றாமாண்டு ஆங்கிலவழி மாணவி செல்வி க.கலைபவித்ரா தேர்வு செய்யப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

2024-2025ஆம் கல்வியாண்டில், சிறப்பாகப் பணியாற்றிய முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் து.விஜயராணி அவர்கள் சிவகாசி அரசு கலைக்கல்லூரியில் முதல்வராகப் பணி உயர்வு பெற்றுப் பணியாற்றுகிறார். அரசுப்பணி நிறைவின் காரணமாக இக்கல்வியாண்டில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மீ.முத்துராணி, பொருளியல் துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர்கள் முனைவர் வ.சூரியகாந்தி, முனைவர் மு.பாப்பா, முனைவர் மு.அருணா ஆகியோர் ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களுடைய ஓய்வறியாத பணி பாராட்டுதலுக்குரியது.

**முனைவாலுட்டம்**

இக்கல்வியாண்டில் முனைவர் பட்டம் பெற்று தமக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்த பேராசிரியர்கள் கணிதத்துறையைச் சார்ந்த உதவிப் பேராசிரியர்களான திருமதி கே.பரமேஸ்வரி, திருமதி ஆர்.ஏ. லதா ஆகியோரும், கௌரவ விரிவுரையாளர் திருமதி பி.ரேவதி, தமிழ்த்துறையின் கௌரவ விரிவுரையாளர் திருமதி. ச.பிரேமா, ஆங்கிலத்துறையின் கௌரவ விரிவுரையாளர்கள் திருமதி.பா.கவிதா, திருமதி. ஜெ.கீர்த்திகா ஆகியோர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் இரா.பிரியதர்சினி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் திருமதி. ச.பிரேமா அவர்களும், ஆங்கிலத்துறையின் பேராசிரியர்கள் முனைவர் தா.மோ.அமலா, முனைவர் ச.சௌமியா, முனைவர் நா.ஞானசெல்வி, முனைவர் கி.பியூலா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் முறையே செல்வி.எம்.பெனிடா, திருமதி.கா.கவிதா, செல்வி.சி.தஸ்லிமா மற்றும் செல்வி அஞ்சலி ஜெகதீஷ் ஆகியோர் முனைவர் பட்டம் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். வரலாற்றுத்துறையின் திருமதி.க.நவாஸ் பானு, உதவிப்பேராசிரியர், 21.02.2025 அன்று தனது முனைவர் பட்டத்திற்கான வாய்மொழித் தேர்வினை நிறைவு செய்துள்ளார். கல்லூரியில் 30க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் ஆய்வு வழிகாட்டிகளாகச் செயல்பட்டு வருகின்றனர் என்பது கல்லூரிக்குக் கூடுதல் சிறப்பாகும்.

**சிறப்புக் கருத்தரங்கம்**

25.01.2025 அன்று எம் கல்லூரியில் "திருவள்ளுவரின் பகுத்தறிவுப் பார்வைகள்" என்னும் தலைப்பில் உலகச் சாதனை மாநாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் சு.சந்திரா, முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை இணைப்பேராசிரியர் திருமதி கா.சத்தியா ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து நடத்தினர். சிறப்பு விருந்தினர் உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் கவிஞர் கா.கருப்பையா மற்றும் உலக திருக்குறள் பேரவை செயலர் கவியரசு மற்றும் ஆர்.அசோக்ராஜ் தங்களது ஆய்வுக்கோவையை வெளியிட்டனர். நான்கு அமர்வுகளில் 31 ஆய்வுரைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு மதுரை வானொலியில் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டது.

**தேசியக் கருத்தரங்கம்**

வணிகவியல் துறை, மதுரை காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் 05.02.2025 அன்று "2047ல் அனைவருக்கும் காப்பீடு - ஒரு பார்வை" (Insurance to All - Vision 2047) எனும் தலைப்பில், கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மும்பை காப்பீட்டு நிறுவனத்தைச் சார்ந்த முனைவர் திரு.சசிதரன் குட்டி அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் திரு.டீ.சுவாமிநாதன், DGM, UIIC, சென்னை அவர்கள் "காப்பீட்டுத் துறையில் மின்னணு உத்திகள் - ஒரு பார்வை 2047" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். திரு டீ.சீனிவாசன் மற்றும் திரு ஜி.எம். சதீஷ்குமார் ஆகியோர்கள் கலந்து கொண்டு கருத்தரங்கில் நிறைவுரையாற்றினர். மாணவிகள் காப்பீடு தொடர்பான கட்டுரைகளை ஆர்வமுடன் சமர்ப்பித்தனர்.

## தேர்ச்சி விபரம்

2023-2024ஆம் கல்வியாண்டிற்குரிய இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர்களின் தேர்ச்சி விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பாடப்பிரிவு | ஆங்கில வழி / தமிழ் வழி | இளநிலை | முதுநிலை |
|---|---|---|---|---|
| 1 | வரலாறு | ஆங்கில வழி | 95.38% | 100% |
| | | தமிழ் வழி | 98.28% | |
| 2 | பொருளாதாரம் | ஆங்கில வழி | 65.63% | 100% |
| | | தமிழ் வழி | 94.83% | |
| 3 | ஆங்கிலம் | முதல் சுழற்சி | 93.44% | 86.21% |
| | | இரண்டாம் சுழற்சி | 88.24% | |
| 4 | தமிழ் | முதல் சுழற்சி | 93.65% | 95.83% |
| | | இரண்டாம் சுழற்சி | 89.83% | |
| 5 | வணிகவியல் | முதல் சுழற்சி | 98.55% | 96% |
| | | இரண்டாம் சுழற்சி | 97.18% | |
| 6 | கணிதவியல் | முதல் சுழற்சி ஆங்கில வழி | 94.29% | 83.87% |
| | | முதல் சுழற்சி தமிழ் வழி | 95.24% | |
| | | இரண்டாம் சுழற்சி ஆங்கில வழி | 67.57% | |
| 7 | இயற்பியல் | ஆங்கில வழி | 93.55% | 100% |
| | | தமிழ் வழி | 72.73% | |
| 8 | வேதியியல் | ஆங்கில வழி | 93.33% | 92% |
| | | தமிழ் வழி | 100% | |
| 9 | விலங்கியல் | ஆங்கில வழி | 100% | 84.21% |
| | | தமிழ் வழி | 100% | |
| 10 | புவியியல் | ஆங்கில வழி | 91.11% | 93.33% |
| | | தமிழ் வழி | 97.50% | |
| 11 | மனையறிவியல் | ஆங்கில வழி | 96.15% | 100% |
| 12 | கணினி அறிவியல் | முதல் சுழற்சி | 100% | 100% |
| | | இரண்டாம் சுழற்சி | 96.55% | |
| 13 | தாவரவியல் | ஆங்கில வழி | 91.89% | 100% |
| 14 | கணினி பயன்பாட்டியல் | ஆங்கில வழி | 100% | 96% |
| 15 | வணிக நிர்வாகவியல் | ஆங்கில வழி | 93.65% | 96.97% |

**ஆய்வுக்கட்டுரை வழங்கல்**

08.03.2025 அன்று மதுரை உலகத் தமிழ் சங்கத்தில் நடைபெற்ற நிறுவன நாள் விழாவில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு.சந்திரா, முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ரா.சத்தியசீலா, மா.கங்கா, ஆ.பாண்டிச்செல்வி, ம.ரஞ்சிதா, இரா.சுகுணாதேவி, முதுகலை இரண்டாமாண்டு மாணவியர் க.அமுதமீனா, பா.நந்தினி, வ.நாச்சம்மா மீனா ஆகியோர் ஆய்வுக்கட்டுரை வழங்கினர்.

இக்கல்வியாண்டில் ஆங்கிலத்துறையின் இணைப்பேராசிரியர்கள் முனைவர் நா.ஞானசெல்வி, முனைவர் கி.பியூலா மற்றும் முனைவர் வி.பாலமுருகேஸ்வரி ஆகியோர் தாய்லாந்து பல்கலைக்கழகத்தில் (04.08.2024 முதல் 08.08.2024 வரை) நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தும், விருதுகள் பெற்றும் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

வரலாற்றுத்துறையின் இணைப்பேராசிரியர் திருமதி முனைவர் ப.கலா, 27.12.2024 அன்று பஞ்சாப், பாட்டியலா பல்கலைக்கழகத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரையை வழங்கியுள்ளார். உதவிப்பேராசிரியர் திருமதி.கி.ஜானகி, இணைப்பேராசிரியர்கள் திருமதி முனைவர் அ.இராஜேஷ்வரபுஷ்பம் மற்றும் செல்வி சு.ஜாகிரா பானு ஆகியோர் புத்திரா பல்கலைக்கழகம், மலேசியா மற்றும் போதி பன்னாட்டு இதழ், மதுரை இணைந்து 26.02.2025 முதல் 02.03.2025 வரை நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர் என்பது பெருமைக்குரிய நிகழ்வாகும். பல்வேறு துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் பன்னாட்டுக் கருத்தரங்கம், தேசிய கருத்தரங்கம், UGC அங்கீகாரம் பெற்ற சர்வதேச இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

21.08.2024 முதல் 23.08.2024 வரை ஹெரியட்-வாட் பல்கலைக்கழகம், திண்டுக்கல் ஜி.டி.என் கலைக் கல்லூரி (A), மற்றும் இந்தியாவின் ஏ.என்.இ.எச்.அறக்கட்டளை ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட "ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு பயன்பாடுகளுக்கான மேம்பட்ட நானோ பொருட்கள் (ஏ.என்.இ.எச்.2024)" குறித்த மூன்றாவது சர்வதேச மாநாட்டில் முதுஅறிவியல் இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி ஜி.சுவேதா கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

இயற்பியல் துறை முதுஅறிவியல் பட்டம் பயிலும் ஜி.பேச்சி 11.03.2025 அன்று மதுரை மதுரா கல்லூரியின் ஆராய்ச்சி மையம் மற்றும் இயற்பியல் முதுஅறிவியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட "கோட்பாட்டு பரிசோதனை மற்றும் கண்காணிப்பு இயற்பியலில் முன்னேற்றங்கள்" குறித்த சர்வதேச மாநாட்டில் "நிலையான கடற்கரை மேலாண்மை துகள்கள் மற்றும் காலநிலை தணிப்பில் கார்பன்டை ஆக்சைடு அகற்றும் தொழில்நுட்பங்களின் பங்கு" என்ற தலைப்பில் ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

ஆங்கிலத்துறை முதுகலை இரண்டாமாண்டு மாணவி செல்வி.கே.நர்மதா இக்கல்வியாண்டில் நடத்தப்பட்ட NET தேர்வில் தேர்ச்சி பெற்று துறை மாணவிகளுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளார்.

மேலும் 21.02.2024 அன்று வேல் டெக் ரங்கா சங்கு ஆர்ட்ஸ் கல்லூரியில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு "Hearing The Unheard: A Study of Sara Novic's True Biz" என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தார்.

**உயர்கல்வித்துறை அமைச்சர் பங்கேற்பு**

கல்லூரியின் உதவி மையம் மற்றும் போதைத் தடுப்புக் குழு ஆகியவற்றை 26.11.2024 அன்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி.செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார். அந்நிகழ்வில் கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி.இ.சுந்தரவல்லி I.A.S. அவர்களும் பங்கேற்றார். தேசிய மாணவர் படை மாணவியரின் போதை தடுப்பு குறித்த மௌன நாடகம் அனைவரின் பாராட்டையும் பெற்றது.

**மாமதுரை விழா**

"மாமதுரை விழா- 2024" சிறப்பு நிகழ்வாக 11.08.2024 அன்று மதுரையின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடையாளமான கலை நிகழ்ச்சிகளின் "Cultural Parade", மதுரை தெப்பக்குளத்திலிருந்து கே.கே.நகர் வளைவு வரை நடைபெற்றது. இதில் நம் கல்லூரியின் 24 மாணவிகள் "கோலாட்டம்" நடன நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரின் பாராட்டைப் பெற்றனர். மதுரையிலுள்ள மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் 15.02.2025 அன்று "மாமதுரை கலைத்திருவிழா இது - நம்ம திருவிழா" என்ற தலைப்பில் பல்வேறு கலைப் போட்டிகள் நடைபெற்றன. இதில் நமது மாணவிகள் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.

**சித்திரைத் திருவிழா**

சிறார்கள் கொண்டாடும் சித்திரைத் திருவிழா 19.12.2024 அன்று கொண்டாடப்பட்டது, கல்லூரியின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். புக் கில்டு ஆப் மதுரை, பிரான்சிஸ் பப்ளிகேஷன் மற்றும் மதுரை ரோட்டரி கிளப் ஆகியவற்றுடன் இணைந்து கட்டுரை எழுதுதல், ஓவியம் வரைதல் மற்றும் கதை எழுதும் போட்டிகள் நடத்தப்பட்டன. திருமதி. வாணி செங்குட்டுவன் விழாவிற்குத் தலைமை தாங்கி மதுரையின் முக்கியத்துவத்தையும் அதன் வரலாற்றுத் தன்மையையும் எடுத்துரைத்தார்.

**ஆய்வரங்கம்**

தமிழ்த்துறை, ஆய்வுத்துறை என்பதால் 2024-2025 ஆம் கல்வியாண்டில் வாரம்தோறும் புதன்கிழமைகளில் ஆய்வரங்கம் நடத்தப்பெறும். இந்த ஆண்டு நடைபெற்ற 7 ஆய்வரங்கங்களில் பேராசிரியர்கள் 6 பேரும், கௌரவ விரிவுரையாளர்கள் 15 பேரும், முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 4 பேரும், முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவிகள் 19 பேரும் தங்களது ஆய்வுரைகளை வழங்கினர்.

**புரிந்துணர்வு பயன்பாடு - பயிலரங்கம்**

26.07.2024 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை மற்றும் திருநாவுக்கரசர் இசை ஆராய்ச்சி இசைக்கல்வி அறக்கட்டளை இணைந்து நடத்தும் ஒரு நாள் தமிழிசைப் பயிலரங்கம் நடைபெற்றது. அதில் பல்வேறு துறை சார்ந்த 108 மாணவியர் கலந்து கொண்டு, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல், கல்லூரிப் பாடல், தேசிய கீதம் ஆகியவற்றை பாடும் பயிற்சியைப் பெற்றனர். மதுரை செந்தமிழ் கல்லூரியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தமையால் அக்கல்லூரி சார்பாக ஐந்து மாணவிகள் இசைப் பயிலரங்கில் பங்கேற்றனர்.

**பேரவை நிகழ்வுகள்**

பேரவை சார்பாக இக்கல்வியாண்டில் சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா, காந்தி ஜெயந்தி விழா, சர்வோதய தினவிழா கொண்டாடப்பட்டது.

**புத்தாக்கப் பயிற்சி**

இக்கல்வியாண்டில் பேராசிரியர்கள் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டு தங்களை மேம்படுத்திக் கொண்டுள்ளனர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் புத்தாக்க பயிற்சி 09.08.2024 முதல் 22.08.2024 வரை ”தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்” எனும் தலைப்பில் நடைபெற்றது. முனைவர் கோ.விஜெயம், முனைவர் சை.ஜெஸிமா ஆகியோர் பங்கேற்றனர். முனைவர் கு.மங்கை கஸ்தூரி UGC - மாளவியா மிஷன் ஆசிரியர் பயிற்சி திட்டத்தால் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் நடைப்பெற்ற “Green Energy Initiative” என்ற சுற்றுச்சூழல் அறிவியல் புத்தாக்க பயிற்சியில் 07.11.2024 முதல் 20.11.2024 வரை கலந்து கொண்டார். மேலும், 75க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் நான் முதல்வன் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியிலும், பிற ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**கல்லூரிக் கலாச்சார குழு**

கல்லூரிக் கலாச்சார குழுவின் ஒருங்கிணைப்பாளராக விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர்.ஜோதி சாம் அவர்களும், குழுவின் உறுப்பினர்களாக தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் மீ.முத்துராணி, வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ப.கலா, உதவிப்பேராசிரியர் முனைவர் க.நவாஸ் பானு அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். 15.07.2024 அன்று “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை” முன்னிட்டு தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி நமது கல்லூரியில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் வினாடி- வினா போட்டிகள் நடத்தப்பட்டு, முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை வென்ற மாணவியர்களுக்குப் பரிசுத்தொகை தலா ரூ.5000/-, ரூ.3000/-, ரூ.2000/- வழங்கப்பட்டது.

பேச்சுப்போட்டியில் இளங்கலைதமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி கா. மஹதி முதல் பரிசு பெற்றார். கட்டுரைப்போட்டியில், இளம் அறிவியல் மூன்றாமாண்டு விலங்கியல் ஆங்கில வழி, செ.மரியம் மேரி, முதல் பரிசு பெற்றார். வினாடி வினா போட்டியில், இளம் அறிவியல் மூன்றாமாண்டு விலங்கியல் தமிழ் வழி செல்வி. க. காவிகாமீனா முதல் பரிசு பெற்றார். மதுரை தமுக்கம் மைதானத்திடலில் 06.09.2024 முதல் 16.09.2024 வரை நடைபெற்ற "புத்தகத்திருவிழா 2024"நிகழ்வில் நம் கல்லூரியின் 16 மாணவிகள் 12.09.2024 அன்று பெண் விடுதலை மற்றும் நம் தமிழ்நாட்டின் செழுமை பற்றிய காட்சிகளை வலியுறுத்தும் இரண்டு நடன நிகழ்வுகளை நிகழ்த்தி புத்தகத் திருவிழா அமைப்புக் குழுவின் பாராட்டைப் பெற்றனர்.

தமிழக அரசு மண்டல கலை மற்றும் பண்பாட்டுத் துறையானது தமிழ்நாட்டின் அழிந்து வரும் நாட்டுப்புறக் கலைகளை உயிர்ப்பிக்கும் முகமாக, அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலும் நாட்டுப்புறக் கலைக்கான இலவச பயிற்சி வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, நமது கல்லூரியில் “ஒயிலாட்டம்” கலைப்பயிற்சி வகுப்புகள் 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து நடைபெற்று வருகிறது. அதன் பயிற்சி ஆசிரியராக திரு நாகேஸ்வரன் என்பவர் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

20.02.2025 அன்று மதுரையில் உள்ள மங்கையர்கரசி மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில் நம் மாணவியர்கள் கலந்து கொண்டு பரிசுபெற்றனர். நத்தம் NPR கலைக் கல்லூரியில் "நட்சத்திரா-2025" என்ற தலைப்பில் 12.02.2025 அன்று நடைபெற்ற கலைத்திறன் போட்டிகளில் நம் மாணவிகள் கலந்து கொண்டு பரிசு பெற்றனர். "வாகை-2025" என்ற தலைப்பில் 28.02.2025 அன்று யாதவர் கல்லூரியில் பல்வேறு கலைத்திறன் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.

13.03.2025 அன்று சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு "வாடி ராசாத்தி" என்ற தலைப்பில் 'You & Me' நிகழ்வு மேலாண்மை குழுவும் 'Lincoln Book of Records'-ம் இணைந்து நடத்திய 8 கலை நிகழ்ச்சிப் போட்டிகளில் நம் கல்லூரியைச் சேர்ந்த 110 மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். அதனோடு உலகத்தில் முதன்முறையாக 8 வகையான பெண்கள் தின நிகழ்வுகள், பல்வேறு கல்லூரிகளில் நடத்தப்பட்டு 8 பெண் தொழில் முனைவோர், 8 பரிசுகள், என்ற **உலக சாதனை நிகழ்வில் நமது கல்லூரி இடம் பெற்றது.**

**குடியரசு தின அணிவகுப்பில் நம் மாணவி**

30.12.2024 முதல் 28.01.2025 வரை புதுதில்லியில் நடைபெற்ற வருடாந்திர NCC குடியரசுதின அணிவகுப்பு முகாமில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் இயக்குநரகத்தின் பிரதிநிதியாக நம் கல்லூரி தமிழ்த்துறை மாணவி சார்ஜென்ட் எம். நந்தினி பங்கேற்றார்.

**போட்டிகள்**

09.12.2024 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்ட வெள்ளிவிழா ஆண்டுப் போட்டிகளுள் திரைச்சுருள் போட்டியில் முது வணிக நிர்வாகவியல் இரண்டாம் ஆண்டு மாணவி வி.நஜ்மா முதல் பரிசினையும், இளம்அறிவியல் மூன்றாம் ஆண்டு கணினிப்பயன்பாட்டியல் மாணவி ரா.ஷாலினி இரண்டாம் பரிசினையும், முதுகலைத் தமிழ் முதலாமாண்டு மாணவி ச.கோகிலா மூன்றாம் பரிசினையும் பெற்றனர். 10.12.2024 அன்று நடைபெற்ற மீக்குறும்படம் போட்டியில் முதுகலைத் தமிழ் முதலாமாண்டு மாணவி ச.கோகிலா முதல் பரிசினையும், முது வணிக நிர்வாகவியல் முதலாம் ஆண்டு மாணவி ச.சிவலெட்சுமி இரண்டாம் பரிசினையும், முது வணிக நிர்வாகவியல் முதலாம் ஆண்டு மாணவி ரா.ஜோதிகா மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

11.12.2024 அன்று நடைபெற்ற ஓவியப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி தே.தர்ஷினி முதல் பரிசினையும், முதுஅறிவியல் தாவரவியல் இரண்டாம் ஆண்டு மாணவி ச.வனப்பேச்சி இரண்டாம் பரிசினையும், இளம்அறிவியல் மூன்றாம் ஆண்டு வேதியியல் மாணவி ம.வீரேஸ்வரி மூன்றாம் பரிசினையும் பெற்றனர். மாவட்ட அளவிலான திருவள்ளுவர் திருவுருவச் சிலை நிறுவப்பட்ட திரைச்சுருள் போட்டியில் முதுவணிக நிர்வாகவியல் இரண்டாமாண்டு மாணவி வி.நஜ்மா இரண்டாம் பரிசினையும், இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி தே.தர்ஷினி ஓவியப் போட்டியில் முதல் பரிசினையும் பெற்றனர். கணினி பயன்பாட்டியல் துறை மாணவிகள் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் பங்கு பெற்று பரிசுகள் வென்றுள்ளனர்.

நத்தம் என்.பி.ஆர். கல்லூரியில், II BCA மாணவி சௌந்தர்யா, போட்டோகிராபி நிகழ்வில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். திண்டுக்கல், எம் வி எம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில், II BCA யாஸ்மினா மற்றும் I MCA வித்ய ஸ்ரீ ஆய்வுத்தாள் வழங்கும் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றனர். மதுரை யாதவா கல்லூரியில், II BCA மாணவிகளான ஹரிப்பிரியா, ரிஹானா பர்வீன், ஹரிஷ்மா, அபி மாரிஸ், III BCA ராகசுதா ஆகியோர் "Remote Zapping" என்ற நிகழ்வில் மூன்றாம் பரிசு பெற்றனர்.

03.01.2025 அன்று தமிழாய்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற பாவைப் பாடல்களை ஒப்புவித்தல் போட்டியில் முதுகலைத்தமிழ் முதலாம் ஆண்டு பொ.நா.வைஷ்ணவி முதல் பரிசினையும், முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு வ.நாச்சம்மாள் மீனா இரண்டாம் பரிசினையும், இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு இ.இந்துஜா மூன்றாம் பரிசினையும் பெற்றனர். ஓவியம் வரைதல் போட்டியில் இளம்அறிவியல் இரண்டாம் ஆண்டு இயற்பியல் ஆங்கில வழி செண்பக ஷர்மிளா முதல் பரிசினையும், முதுகலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் வி.மாலதி இரண்டாம் பரிசினையும், இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு வி.தர்ஷினி மூன்றாம் பரிசினையும் பெற்றனர். 12.02.2025 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் சார்பாக நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு முதல் சுழற்சி கா.மஹதி முதல் பரிசினையும், இளம்அறிவியல் இயற்பியல் மூன்றாமாண்டு ஆங்கில வழி அபிநிவேதா இரண்டாம் பரிசினையும், மூன்றாம் ஆண்டு ஆங்கில வழி கா.நிவேதா மூன்றாம் பரிசினையும் பெற்றனர். "தமிழ்நாட்டின் வளர்ச்சியில் கலைஞர்" என்ற தலைப்பில் நடைபெற்ற போட்டியில் இளம் வணிக நிர்வாகவியல் மூன்றாம் ஆண்டு தொ.கு.கீர்த்திகா முதல் பரிசினையும், முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவி பா.நந்தினி இரண்டாம் பரிசினையும், முதுஅறிவியல் கணிதம் இரண்டாம் ஆண்டு மோ.சில்வியா மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

"தெற்கிலிருந்து ஓர் சூரியன்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதை போட்டியில் முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு செ.பாவனி முதல் பரிசினையும், முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவி பா.சா.நந்தினி இரண்டாம் பரிசினையும், இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு பா.நந்தினி மூன்றாம் பரிசினையும் பெற்றனர். 13.02.2025 அன்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு முதல், இரண்டு, மூன்று பரிசுகள் முறையே ரூ.5000, ரூ.3000, ரூ.2000 வழங்கப்பட்டன.

சென்னை பொது நூலக இயக்ககம் மற்றும் பள்ளிக் கல்வி பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்திய இளைஞர் இலக்கிய விழா போட்டிகள் 07.01.2025 முதல் 09.01.2025 வரை 10 வகையான போட்டிகள் நடைபெற்றன. ஓவியப்போட்டி, உடனடி ஹைக்கூ உருவாக்கம் போட்டி, இரண்டு நிமிட பேச்சுப்போட்டி, நூல் அறிமுகப் போட்டி, விவாத மேடை, பேச்சுப் போட்டி, இலக்கிய வினாடி வினா, படத்தொகுப்பு உருவாக்கம், Book Review, Prompt Engineering போன்ற போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற மாணவியருக்கு ரொக்கப் பரிசாக ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் (1,20,000) வழங்கப்பட்டது. வேதியியல் துறை மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

1. 05.08.2024 அன்று தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச சிலம்பம் போட்டியில் ஆ.ஆர்த்தி (III EM) முதல் பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.
2. 12.08.2024 அன்று NSS நடத்திய போதை மருந்து விழிப்புணர்வுக் கட்டுரைப் போட்டியில் D.தர்ஷினி (II TM) முதல் பரிசு பெற்றுள்ளார்.
3. தெய்வ நெறிக்கழகம் நடத்திய திருவேணி விழா பேச்சுப்போட்டியில் S.சிவலெட்சுமி (I EM) மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.
4. கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டியில் S.சிவலெட்சுமி (I EM) ரூ.10,000 பரிசாகப் பெற்றார்.
5. ஆன்லைன் வரைபடப் போட்டியில் சு. தீபசரஸ்வதி (I M.Sc) முதல் பரிசு பெற்றுள்ளார்.
6. இந்துமதி (2021-ல் பட்டம் பெற்ற மாணவி) - TNPSC Group II தேர்வில் வெற்றி பெற்று சென்னை நகரில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்.
7. சிலம்பம் ஒற்றைக்குச்சி சுழற்சி போட்டியில் டீ.அஸ்வினி (III TM) முதல் பரிசு பெற்றுள்ளார்.
8. ரோட்டரி கிளப் நடத்திய கவிதை போட்டியில் சு. தீபசரஸ்வதி (I M.Sc) முதல் பரிசு பெற்றுள்ளார்.
9. 24.10.2024 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" ஹாக்கத்தான் போட்டியில் S.யுவதாரணி (III TM) மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.

பொருளியல் துறையில் Forum of Free Enterprise A.D.Shroff நினைவாக நடத்தும் பேச்சுப்போட்டி 19.08.2024 அன்று நடைபெற்றது. இப்போட்டி கடந்த 10 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. வெற்றி பெறும் மாணவியருக்குப் பரிசுத் தொகையாக ரூ.5000 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப்போட்டியை பொருளியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு.அருணா ஒருங்கிணைத்து நடத்தினார்.

புவியியல் துறையின் சார்பாக 14.02.2025 அன்று இளநிலை மாணவர்களுக்கான போட்டோகிராபி போட்டியும், 'நிலமும் வளமும்' என்ற தலைப்பில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியும் நடத்தப்பட்டது. புவியியல் துறை மற்றும் பிற துறையிலிருந்து மாணவிகள் கலந்து கொண்டனர். மனையியல் துறை மாணவியர்கள் பல்வேறு கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளில் ஆர்வமாக பங்கேற்று ஏராளமான பரிசுகளைப் பெற்றனர். மதுரை ஆல்பா மருத்துவமனையால் 20.12.2024 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட நியூட்ரி /பெஸ்ட் 2024 இல் அவர்கள் ஒட்டுமொத்த சாம்பியன்களாக உருவெடுத்தனர்.

**உலக சுற்றுலா தினம்**

உலக சுற்றுலா தினம் 27.10.2024 அன்று கொண்டாடப்பட்டது, கொடைக்கானலில் உள்ள தபோவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவரான, எம்.தீனா தயாளன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாய சுற்றுலா குறித்த சிறப்பு சொற்பொழிவு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாவின் எதிர்கால வளர்ச்சி குறித்தும் விளக்கினார்.

**பயிற்சிப் பட்டறை**

தொல்லியல் மரபு மன்றம் சார்பாக, 18.03.2025 அன்று மாணவிகளுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. திண்டுக்கல், தொல்லியல் அலுவலர், முனைவர்.பரத்குமார் அவர்கள் "வெம்பக்கோட்டை அகழ்வாராய்ச்சியும், தொல்லியல் பொருட்களும்" என்ற தலைப்பிலும் மதுரை மாவட்ட தொல்லியல் அலுவலர் தீ.ஆனந்தி அவர்கள் "தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி" என்ற தலைப்பிலும் உரையாற்றினர். பட்டறையில் கலந்து கொண்ட 125 மாணவிகளுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 19.03.2025 அன்று களப்பணிக்காக 90 மாணவிகள் மதுரையை சுற்றியுள்ள யானைமலை, லாடன்கோவில் மற்றும் கீழடி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாவட்ட தொல்லியல் அலுவலர் அவ்விடங்களை பற்றி மாணவிகளுக்கு விளக்கம் அளித்தார். மனையியல் துறையில் 31.08.2024 அன்று நடத்தப்பட்ட "Entrepreneurship Opportunity in the Food Processing Sector" என்னும் பயிற்சி பட்டறையில் இரண்டாம் ஆண்டு முதுஅறிவியல் தாவரவியல் மாணவிகள் பங்கேற்றனர். 03.03.2025 முதல் 04.03.2024 வரை டிஜிட்டல் எலக்ட்ரானிக்ஸ் சர்க்கியூட் டிசைன் குறித்து இரண்டு நாள் நேரடிப் பயற்சிப் பட்டறை இயற்பியல் துறை மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது. 20.09.2024 அன்று கணினிப் பயன்பாட்டியல் துறையில் "கன்வென்ஷனல் நியூரல் நெட்வொர்க் தியரி" என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பங்கேற்ற கோயம்புத்தூர், பிஎஸ்ஜி காலேஜ் ஆப் டெக்னாலஜி, பேராசிரியர் முனைவர்.பி.மலர் பயிற்சி அளித்தார்.

**காந்தியச் சிந்தனைக் கல்வி**

2024-2025 கல்வியாண்டிற்கான காந்திய சிந்தனைத்தேர்வின் ஒருங்கிணைப்பாளராக கணிதத்துறை, துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் திரு.கு.முத்துப்பாண்டியன் செயல்பட்டார். இந்த ஆண்டு எம் கல்லூரி மாணவர்களில் 636 CGT மற்றும் 576 பேர் DGT தேர்வுகளை எழுதியுள்ளனர்.

| வ.எண் | பாடப்பிரிவு | பதிவு செய்தவர்கள் | தேர்வு எழுதியவர்கள் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | CGT | 666 | 636 | 95.13% |
| 2. | DGT | 587 | 576 | 98.78% |
| | Total | 1253 | 1212 | 96.72% |

**கூடுதல் வகுப்பறைகள் திறப்பு நிகழ்வு**

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் Phase-II இல் ரூ.380 இலட்சம் மதிப்பீட்டில் 12 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டு வீடியோ கான்பரன்ஸ் மூலம் தமிழக முதல்வர் அவர்களால் 14.02.2025 அன்று திறக்கப்பட்டு மாணவியர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது, நம் கல்லூரி வளர்ச்சியின் மற்றொரு மைல்கல்லாகும்.

**பாடம் சாரா செயல்பாடுகள் (Extension Activity)**

23.01.2025 மற்றும் 24.01.2025 ஆகிய நாட்களில் அகத்தர மதிப்பீட்டுக்குழு (IQAC) உடன் இணைந்து தத்து எடுக்கப்பட்ட கிராமமான கள்ளந்திரியில் பயிலரங்க களப்பயிற்சியில் (Extension Activity), II MCA மாணவிகள் முதல் நாளில் கிராமத்தின் முக்கியமான பங்கேற்பாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் கிராமத்தின் டிஜிட்டல் தேவைகளை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டனர். இரண்டாம் நாளில், II MCA மாணவிகள் டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் சமூக ஊடகம் தொடர்பான பயிற்சிப்பட்டறையை 100 நாள் திட்டப் பணியாளர்களுக்கும், சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் நடத்தி, கிராம பெண்களுக்கு Instagram, YouTube, Facebook, Canva போன்ற தளங்களை தொழில் முனைவு மற்றும் தனிநபர் வளர்ச்சிக்காக பயன்படுத்துவது குறித்து பயிற்சி வழங்கினர்.

நமது கல்லூரியின் அகத்தரமதிப்பீட்டுக்குழுவின் கிராம தத்தெடுப்பு திட்டத்தின் முன் முயற்சியாக 25.09.2024 அன்று, மதுரை "வாய்ஸ் டிரஸ்டு" என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து, மனையியல் முதுஅறிவியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவியர்கள் கள்ளந்திரி கிராமத்தில் ஊட்டச்சத்து விழிப்புணர்வை மேற்கொண்டனர். இதில் வில்லுப்பாட்டு மூலம் ஊட்டச்சத்து விழிப்புணர்வு, இரத்தச்சோகை விழிப்புணர்வு நாடகம், சமநிலை உணவுக் குறித்த செயல்முறை விளக்கம், குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மருத்துவப் பரிசோதனை முகாம் போன்ற செயல்பாடுகள் அக்கிராம மக்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டன.

மதுரை வாய்ஸ் டிரஸ்டு என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து, 05.02.2025 அன்று, கள்ளந்திரி கிராமத்தில் மனையியல் முதுஅறிவியல் இரண்டாமாண்டு மாணவியர்கள் களப்பணி செயல்பாடு மேற்கொண்டனர். இதில் மருத்துவ முகாம் மற்றும் கண் பரிசோதனைமுகாம், பெரியவர்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து மதிப்பீடு, முன்பள்ளி குழந்தைகளுக்கான மருத்துவமதிப்பீடு, உணவு முக்கோணம் (Food Pyramid) மற்றும் எனது தட்டு (My Plate) பற்றிய ஊடாடும் விளக்கக்காட்சிகள், பள்ளி குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து வினாடிவினா மற்றும் பெண்களுக்கு இரத்தசோகை விழிப்புணர்வு அமர்வுகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் கிராம மக்கள் பயன் பெரும் வகையில் இடம்பெற்றன. இந்த முயற்சியின் மூலம், மாணவியர்கள் கிராம மக்களுக்கு ஆரோக்கிய கல்வியை வழங்கி, ஒட்டுமொத்த நலன் மற்றும் உணவு குறித்த விழிப்புணர்வை உருவாக்கினர்.

**மன்ற செயல்பாடுகள்**

2024-2025ஆம் கல்வியாண்டில் அனைத்துத் துறைகளிலும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகளுக்கு மன்றக் கூட்டம் நிகழ்த்தப்பெற்றது. இக்கல்வியாண்டின் அனைத்துத் துறைகளிலும் மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, ரங்கோலிப் போட்டி, ஓவியப் போட்டி, திறனறிவுத் தேர்வு வினாடிவினா மற்றும் சுவரொட்டி தயாரித்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**ஆராய்ச்சி மன்றம்**

2024-2025 கல்வியாண்டில் ஆங்கிலத்துறையில் ஆராய்ச்சி மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக உதவிப்பேராசிரியர் முனைவர் சி.சௌமியா, இணைப்பேராசிரியர் முனைவர் வி.பாலமுருகேஸ்வரி ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். ஆராய்ச்சி மன்றத்தில் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவிகள் 18 பேர் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். ஆங்கிலத்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் த.மோ.அமலா அவர்கள் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மாணவிகள் ஆராய்ச்சியின் மீது ஆர்வம் வளர்த்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

**நாடக மன்றம்**

26.09.2024 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறையின் சார்பில் முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைமையில் நவீன நாடகப் பயிலரங்கின் தொடக்க விழா நடைபெற்றது. முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மீ.முத்துராணி ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை கௌரவ விரிவுரையாளர் ஜெ.சுந்தரபாண்டியன் மேற்பார்வையில் 15 நாட்களுக்கு மேலாக தமிழ்த்துறை மாணவியர்களுக்கு நாடகப்பயிற்சி துறைப் பேராசிரியர்களின் ஒத்துழைப்போடு நடைபெற்றது. நவீன நாடக இயக்குனர் மதுரை கருமாத்தூர் மனோஜ் அவர்கள் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் 30 பேருக்கு நாடகப் பயிற்சி அளித்தார். 31.01.2025 அன்று நாடகப் பயிலரங்கின் நிறைவு விழா நடைபெற்றது. கோவில்பட்டி மணல்மகுடி நவீன நாடக இயக்குநர் ச.முருகபூபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாணவிகளின் “மனித விலங்கு” நாடகம் அரங்கேற்றம் நடைபெற்றது. 20.02.2025 அன்று மதுரை உலகத் தமிழ் சங்கத்திலும், 14.03.2025 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், 21.03.2025 அன்று கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியிலும் இந்நாடகம் தமிழ்த்துறை மாணவியர்களால் நிகழ்த்தப்பட்டது.

ஆங்கிலத்துறை நாடக மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக உதவிப்பேராசிரியர் திருமதி.பொ.சுபா மற்றும் கௌரவ விரிவுரையாளர் முனைவர் து.கீர்த்திகா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். 24.09.2024 அன்று இரண்டாம் ஆண்டு முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி மாணவிகளால் *The King Who Limped* - Monica Thorne மற்றும் *A Dollar* - David Pinks ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. நாடக மன்ற நிகழ்வு மாணவிகளின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் சிந்தனை, உணர்ச்சி வெளிப்பாடு, மொழித்திறன் மற்றும் சமூகத்திறன்களை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

**வாசகர் மன்றம்**

வாசகர் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஈ.பிரேமா மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் ஜா.ஷாகின் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். இம்மன்றத்தின் கூட்டம் 08.10.2024 அன்று மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை மாணவிகளால் நடத்தப்பட்டது. ‘‘இன்று வாசகர், நாளை தலைவன்’’ என்ற Margaret Fuller அவர்களின் கருத்தை மையமாகக் கொண்டு நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. மாணவிகள் சுய முன்னேற்றம்,

புனைக்கதை, உலக இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் இருந்து நூல்களைத் தேர்வு செய்து விமர்சனம் செய்தனர். விமர்சிக்கப்பட்ட நூல்கள் : *The Mountain is You*, *The Girl With No Dreams, It Ends With Us, A Tale of Two Cities, Love's Labour's Lost, Silas Marner, The Fall, Same As Ever* மற்றும் "உன்னோடு ஒரு நிமிஷம்" ஆகியவையாகும். வாசகர் மன்றம் மாணவிகளின் வாசிப்பு திறன், பேசும் திறன் மற்றும் விமர்சன சிந்தனையை மேம்படுத்தும் வகையில் செயலாற்றுகிறது.

**வாசகர் குழு**

ஆங்கிலத்துறை கௌரவ விரிவுரையாளர் செல்வி அ.மோனிகா மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் பா.கார்த்திகேயன் ஆகியோர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். மாணவர்களிடையே வாசிப்பு பண்பாட்டை உருவாக்கும் நோக்கமும், இலக்கிய உலகங்களை ஆராயும் வாசகர்களின் சமூகத்தை உருவாக்குவதும் குழுவின் இலக்குகளாக உள்ளன. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு ஆங்கிலத்துறை மாணவிகள் 112 பேர் 24.03.2025 அன்று வாசகர் குழுவின் சார்பாக நடைபெற்ற வாசிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு தங்களுக்கு விருப்பமான நூல்களை வாசித்து மகிழ்ந்தனர்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள்**

நம் கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு 17.12.2024 அன்று கல்லூரியைச் சேர்ந்த 25 மாற்றுத்திறனாளி மாணவர்கள் "ஒவ்வொருவரும் வேறுபட்டவர்களே", "என் கனவு நிலப்பரப்பு" என்ற தலைப்புகளில் நடைபெற்ற ஓவியப்போட்டி, "மகாகவி பாரதியாரின் பாடல்கள்" என்ற தலைப்பில் நடைபெற்ற பாட்டுப்போட்டி, "நாம் இன்றி, நம்மைப்பற்றி ஒன்றும் கூடாது" என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதைப் போட்டி ஆகியவற்றில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக, மனையியல் துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் ஜ.பெ.ஷர்மிளா செயல்பட்டு வருகிறார். கல்லூரி கலாச்சாரக்குழு நமது கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச மாற்றுத்திறனாளி தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளி மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் ஓவியம், பாட்டு, கவிதை, வண்ணம் தீட்டுதல் போன்ற பல்வேறு போட்டிகளைள நடத்தியது. அப்போட்டிகளில் தமிழ்த்துறை மாணவிகள் வெற்றி பெற்றனர். ஓவியப் போட்டியில் ஆ.ஆயிஷா ராஜிமா இரண்டாம் பரிசினையும், கவிதைப் போட்டியில் அ.மோகனப்பிரியா முதல் பரிசினையும், பாட்டுப்போட்டியில் ச.மகாலட்சுமி இரண்டாம் பரிசினையும், அ.பாலகுருதேவி மூன்றாம் பரிசினையும் பெற்றனர். விளையாட்டுக்குழு சார்பில் மாற்றுத்திறன் மாணவியருக்கான பிரிவில் 100 மீட்டர், குண்டு எறிதல், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

**திருக்குறள் தேர்வு**

27.01.2025 அன்று உலகப் பேரவைத் திருக்குறள் தேர்வினை, முதலாம் ஆண்டு மாணவிகள் 357 பேரும், இரண்டாம் ஆண்டு மாணவிகள் 391 பேரும், மூன்றாம் ஆண்டு மாணவிகள் 109 பேரும், முதுகலை மாணவிகள் 49 பேரும், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 3 பேரும், ஆக மொத்தம் 909 மாணவிகள் தேர்வு எழுதினர். கௌரவ விரிவுரையாளர் முனைவர் அ.யோகேஸ்வரி ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

**உடற்கல்வித்துறை**

நமது கல்லூரி விளையாட்டுக்குழு, கல்லூரி முதல்வர், முனைவர். திருமதி சூ.வானதி அவர்கள் தலைமையிலும் விளையாட்டுக்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளோடும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.

**விளையாடடுக்குழு உறுப்பினர்கள்**

தலைவர் : முனைவர். திருமதி. சூ.வானதி - முதல்வர்

செயலாளர் : முனைவர்.திரு. செ.ரமேஷ் - உடற்கல்வி இயக்குநர்

உறுப்பினர்கள்:

1. முனைவர். திரு. பா.செல்வ வீரகுமார் - வணிக நிர்வாகவியல்துறை
2. முனைவர். திருமதி.வே. இந்திராதேவி - வரலாற்றுத்துறை
3. முனைவர். திருமதி. டி.ஜெயா - வரலாற்றுத்துறை
4. முனைவர் திருமதி. சி.இராணி விஜயா - விலங்கியல்துறை
5. முனைவர் திருமதி. அ.பியூலா மேரி - இயற்பியல்துறை
6. செல்வி. க. கங்கா வித்யா - விளையாட்டு மாணவச் செயலாளர்

கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவியர் சேர்க்கையின் போது விளையாட்டில் தனித்திறமை பெற்ற மாணவியருக்கு முன்னுரிமை அளித்து சிறப்பு இட ஒதுக்கீட்டின்படி இளநிலை கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 3% விழுக்காடு ஒதுக்கீடும், முதுநிலை கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவிற்கு 2% விழுக்காடு ஒதுக்கீடும் வழங்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் மாணவியர் சேர்க்கப்பட்டனர். இந்த கல்வி ஆண்டில் நமது மாணவியர் சர்வதேச அளவிலும், அகில இந்திய பல்கலைக்கழக அளவிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழக அளவிலும், மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்து முத்திரை பதித்துள்ளனர். சர்வதேச அளவில் மூன்றாம் ஆண்டு வேதியியல் பயிலும் மு.ஆர்த்தி என்ற மாணவி மாவட்ட அளவில் திருமங்கலத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று பிறகு மாநில அளவில் தஞ்சாவூரில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று அதன் பின் தேசிய அளவில் கோயம்புத்தூரில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற சர்வதேச அளவிலான சிலம்பப் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான துப்பாக்கி சுடுதல் 10 மீட்டர் ஏர் ரைபில் போட்டி மதுரை ரைபில் கிளப்-ல் நடைபெற்றது. இப்போட்டியில் முதுகணினி பயன்பாட்டியல் முதலாம் ஆண்டு பயிலும் மாணவி எஸ்.வித்யாஸ்ரீ சண்டிகார் மாநிலத்தில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழக துப்பாக்கி சுடுதல் போட்டியில் விளையாட மதுரை காமராசர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றதும் நமது கல்லூரிக்கு பெருமைக்குரிய நிகழ்வாகும். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி திருப்பாலை, யாதவா இருபாலர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து தனியார் கல்லூரிகளையும் வெற்றி பெற்று நமது கல்லூரி அணி சாம்பியன்ஸ் பட்டத்தை பெற்று வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான ஜூடோ போட்டி திண்டுக்கல், ஜி.டி.என். கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் இளம் வணிகவியல் மூன்றாம் ஆண்டு பயிலும் என். பி.ஹர்சினி என்ற மாணவி தங்கப்பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்ததுடன் மத்தியபிரதேச மாநிலம் போபாலில் உள்ள எல்.என்.சி.டி. பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தெற்கு மற்றும் மேற்கு இந்திய பல்கலைக்கழகங்களுக்கான போட்டியில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மாவட்ட அளவிலான ஜூடோ போட்டியில் ஜெயபிரதா தங்கப்பதக்கம் பெற்றதோடு கருப்பு பெல்ட் சான்றிதழையும் பெற்று ஜூடோ பயிற்றுநராக தேர்ந்தெடுக்கப்பட்டு நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பல்கலைக்கழக அளவில் மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்ட கல்லூரிகள் கலந்துகொண்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் போட்டிகளில் குறிப்பாக வலு தூக்கும் போட்டியில் அனைத்துத் தனியார் கல்லூரிகளையும் பின்னுக்குத் தள்ளி நம் கல்லூரி மாணவிகள் சாதித்திருப்பது பிற அரசுக்கல்லூரிகளுக்கு ஊக்கத்தை அளிக்கக் கூடிய நிகழ்வாகும். பல்கலைக்கழக அளவிலான வலு தூக்கும் போட்டியில் முதலாம் ஆண்டு முதுநிலை வணிக நிர்வாகவியல் மாணவி க.சக்திமாரி (69Kg) முதலிடம் பெற்றுள்ளனர். முதலாம் ஆண்டு வரலாறு பயிலும் மாணவி ராஜகுமாரி (84Kg) மூன்றாமிடம் பெற்றுள்ளார். மூன்றாம் ஆண்டு இளநிலை கணிதம் பயிலும் மாணவி பி.கார்த்திகை பிரியா (52Kg) மூன்றாமிடம் பெற்றுள்ளார். மூன்றாம் ஆண்டு இளநிலை விலங்கியல் பயிலும் மாணவி ஆர்.சிபியாள் (57Kg) மூன்றாமிடம் பெற்றுள்ளார். மூன்றாம் ஆண்டு வேதியியல் பயிலும் மு.ஆர்த்தி என்ற மாணவி பல்கலைக்கழக அளவிலான 200 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் பிரிவில் முதலிடம் பெற்றார்.

மாநில கபாடி அணிக்கான மதுரை மாவட்ட கபாடி ஜூனியர் மற்றும் சீனியர் பிரிவிற்கான வீராங்கணைகள் தெரிவுப் போட்டியை நமது கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடத்தியது, நமது கல்லூரியின் சிறப்பை அனைவரும் அறிந்து கொள்ளச் செய்துள்ளது. மாரத்தான் போட்டி மாணவியர்களிடையே ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வை தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் அவர்களை மாரத்தான் போட்டிகளில் பங்கேற்பதற்கு நமது கல்லூரி முதல்வர் அவர்கள் சிறப்பு அனுமதி அளித்து பங்கேற்க ஊக்கப்படுத்தப்படுத்தியதின் விளைவாக உலக பெண்கள் தினமான மார்ச் 8 அன்று மதுரை மாநகர காவல் துறையினரால் நடத்தப்பட்ட மாரத்தான் போட்டியில் நமது கல்லூரியிலிருந்து 50 மாணவியர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

**நான் முதல்வன்**

நான் முதல்வன் திட்டக் குழுவில், முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைவராகவும், வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் தா.குளோரி செல்வம் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்கள். இத்திட்டத்தில் 1314 முதலாமாண்டு மாணவியரும், 1286 இரண்டாமாண்டு மாணவியரும், 1301 மூன்றாமாண்டு மாணவியரும் தமது துறைகளை சார்ந்த தொழில்நுட்ப பாடங்களை கற்று பயன்பெற்று வருகிறார்கள். நான் முதல்வன் சார்பில் நடத்தப்பட்ட Hackathon இறுதிச்சுற்றில் கீழ்கண்ட மாணவியர்கள் பரிசுகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். நமது கல்லூரியில் 06.02.2025 அன்று நான் முதல்வன் திட்டம் சார்பில் 15க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் வாயிலாக மெகா வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. அந்நிறுவனங்களில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 253 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகளை பெற்றனர்.

**இணையவழிக் கல்வி**

இந்தியத் தொழில்நுட்பக் கழகம், சென்னை (IITM) உடன் இணைந்து கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து டேட்டா சயின்ஸ் என்ற பாடம் இணைய வழி மூலமாக மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. இந்த இணையவழி கற்றலில் நமது கணினி பயன்பாட்டியல் துறையுடன் இணைந்து சென்னை குயின் மேரிஸ் கல்லூரி மாணவியர் மற்றும் ஹைதராபாத் BVRIT இன்ஜினியரிங் கல்லூரி, மாணவியரும் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். இந்த நிகழ்வுகள் அனைத்தும் Youtube சேனலில் மற்ற மாணவர்களும் பயன்பெறும் படி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**ஆற்றலமுது - ஊட்டச்சத்து உணவுத் திட்டம்**

"ஆற்றலமுது" - ஊட்டச்சத்து உணவு திட்டம் இவ்வாண்டு நிகழ்த்தப்பட்ட அனைத்து சாதனைகளுக்கும் மாணவியர்களுக்கு பின்புலமாக இருந்து வலுவூட்டியது. நாடாளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு சு.வெங்கடேசன் அவர்களால் வழிகாட்டப்பட்டு "தென்புலம் அறக்கட்டளை" சேர்மன் திரு.மதன் அவர்கள் மூலம் 65 விளையாட்டுத்துறை மாணவியர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட "ஆற்றலமுது" என்ற ஊட்டச்சத்து உணவு, திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியர்களுக்குத் தொடர்ந்து இந்தக் கல்வியாண்டிலும் வழங்கப்பட்டு வருகிறது.

**தேசிய மாணவர் படை**

நமது கல்லூரியில் முதல்வர் அவர்கள் தலைமையில் தேசிய மாணவர் அலுவலர் வேதியியல் துறை இணைப் பேராசிரியர் Capt.முனைவர்.ரெ.முத்துச் செல்வி அவர்களின் கீழ் தேசிய மாணவர் படை இயங்கி வருகிறது. இந்தக் கல்வியாண்டில் கல்லூரியின் NCC ராணுவப் பிரிவில் 35 முதலாமாண்டு மாணவிகளும், 34 இரண்டாமாண்டு மாணவிகளும், மற்றும் 35 மூன்றாமாண்டு மாணவிகளும் ஆகமொத்தம் 104 மாணவிகள் உள்ளனர். இடையப்பட்டியில் உள்ள NTA-விலும், மதுரை லேடிடோக் கல்லூரியிலும் நடைபெற்ற முகாமில் NCC மாணவிகள் கலந்து கொண்டனர். கேடட் அமுதா அகில இந்திய NCC பெண்கள் மலையேற்றப் பயணத்தில் கலந்துகொண்டார். NCC சார்பில் சர்வதேச யோகாதினம் கடைபிடிக்கப்பட்டது.

கார்கில் விஜய்திவாஸ் (வெள்ளிவிழா) 26.07.2024 அன்று NCC கேடட்களால் கலாச்சார நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. நீலகிரியின் வெலிங்டனில் வழக்கமான இராணுவப்பிரிவுடன் கூடிய இராணுவ இணைப்பு முகாமில் 17 கேடட்கள் கலந்து கொண்டனர். ஸ்வச்சதா லக்ஷித் ஈக்யாய் திட்டத்தின் கீழ், 26.09.2024 அன்று கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன, மேலும் 27.09.2024 அன்று ஸ்வச்சதா கி பகிதாரி திட்டத்தின்கீழ் கல்லூரி வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் சுத்தம் செய்யப்பட்டன. குடியரசு தினவிழாவில் 12 NCC மாணவிகள் பங்கேற்றனர்.

30.12.2024 முதல் 28.01.2025 வரை புதுதில்லியில் நடைபெற்ற வருடாந்திர NCC குடியரசுதின அணிவகுப்பு முகாமில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் இயக்குநரகத்தின் பிரதிநிதியாக நம் கல்லூரி சார்ஜென்ட் எம். நந்தினி பங்கேற்றார்.

27.01.2025 அன்று கரியப்பா பரேட் மைதானத்தில் நடந்த பிரதமரின் பேரணியில் சார்ஜென்ட் எம்.நந்தினி கலந்து கொண்டார். 15.02.2025 மற்றும் 16.02.2025 ஆகிய தேதிகளில் 28 கேடட்கள் C. சான்றிதழ் தேர்வை எழுதினர், அதில் 26 கேடட்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். 22.02.2025 மற்றும் 23.02.2025 ஆகிய தேதிகளில் 31 கேடட்கள் பி சான்றிதழ் தேர்வு எழுதினர், மேலும் அனைத்து கேடட்களும் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**நாட்டு நலப்பணித்திட்டம்**

நமது கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் கீழ் ஐந்து அலகுகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டு நலப்பணித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக கல்லூரி முதல்வர் முனைவர் சூ. வானதி அவர்களும், நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்களாக பொருளியல் துறை இணைபேராசிரியர் முனைவர். இரா.பூமாதேவி, வரலாற்றுதுறை இணைப்பேராசிரியர் முனைவர்.ஜெ.ஜெயக்குமாரி ஞானதீபம், வேதியியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.து. ரேணுகா மற்றும் கணினிஅறிவியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர். கோ. சுதா ஆகியோர் இணைந்து நாட்டு நலப்பணித் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகின்றார்கள்.

கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் 19.06.2024 அன்று உலக யோகா தினமும், 06.08.2024 அன்று உலக தாய்ப்பால் வார விழாவும் கொண்டாடப்பட்டன. மாநிலத்தில் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 05.08.2024 அன்று போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழியும் 12.08.2024 அன்று போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலமும், 26.11.2024 அன்று போதை இல்லாத் தமிழகம் விழிப்புணர்வு பேரணியும் மேற்கொள்ளப்பட்டது. 26.09.2024 அன்று மதுரை மாநகர காவல்துறையின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் நம் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அமைப்பும் இணைந்த முயற்சியில் போதை ஒழிப்பு குழு மன்றம் அமைக்கப்பட்டது.

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் கண் சிகிச்சைத்துறையுடன் இணைந்து கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சி 02.09.2024 அன்று நடத்தப்பட்டது. 15.08.2024 அன்று தேசிய கொடியுடன் நமது உறவானது இதய பூர்வமானதாக அமைய வேண்டி ஹர் கர்திரங்கா உறுதிமொழியும், 26.11.2024 அன்று இந்திய அரசியல் அமைப்பு தின உறுதிமொழியும், 25.01.2025 அன்று தேசிய வாக்காளர் தின உறுதிமொழியும், நாட்டு நலப்பணித் திட்ட மாணவியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்கு 24.07.2024 அன்று இரும்புச்சத்து மாத்திரைகளும், 23.08.2024 அன்று குடல் புழு நீக்க மாத்திரைகளும், 04.09.2024 அன்று சானிட்டரி நாப்கின்களும் வழங்கப்பட்டன. கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் "தூய்மையே சேவை" எனும் வாசகத்தொடருக்கு ஏற்ப கல்லூரி வளாகத் தூய்மை பணியும், 04.10.2024 அன்று வைகை ஆற்று தூய்மைப் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

03.12.2024 அன்று நம் கல்லூரியும் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மாற்றுத்திறனாளிகள் துறையும் இணைந்து சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவைக் கொண்டாடினர். இந்நிகழ்வில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவியர்கள் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்தனர். கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் 11.03.2025 முதல் 17.03.2025 வரை அரிநாராயணபுரம், ஆமந்துார்பட்டி, தொப்புலாம்பட்டி, அய்யனார் நகர், அம்பேத்கர் நகர் ஆகிய ஐந்து கிராமங்களில் ஏழு நாள் சிறப்பு முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் சு.வானதி அவர்கள் தலைமை உரையாற்றினார்.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் சிறப்புகள் பற்றியும் மாணவ தொண்டர்களின் பொறுப்புகள், சகிப்புத்தன்மை, சேவை செய்யும் மனப்பான்மை, பெண்கள் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவை பற்றியும் பேராசிரியர்கள், மனநல ஆலோசகர், வழக்கறிஞர், காவல் ஆய்வாளர், இயற்கை வாழ்வியல் வல்லுனர்கள் மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார்கள். வாழ்க்கையின் வெற்றி ரகசியம், இயற்கை மருத்துவ முறைகள், சமத்துவ சமுதாயத்திற்கான யுவதியின் குரல், பெண்களுக்கான வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு, பெண்களுக்கு எதிரான குற்றங்களில்போக்சோ சட்டம் மற்றும் கிரிமினல் வழக்குகள், சட்ட பிரிவுகள் பற்றியும், மாணவர் சமுதாயமும் ஊடகமும், இலட்சிய பயணம், டிஜிட்டல் உலகத்தில் சைபர் குற்றங்களும் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையும், லட்சியத்தின் பாதை என்ற தலைப்பிலும் மாணவியர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் சிறப்புரையாற்றினார்கள். மாணவியர்கள் கிராமங்களில் கிராமப்புற சுற்றுப்புற தூய்மை பணியை மேற்கொண்டனர்.

ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் மாணவியர் நெகிழி ஒழிப்பு சுற்றுப்புறத் தூய்மையை மேற்கொண்டனர். கள்ளந்திரி கிராம பிரதான கால்வாயில் 100 கிலோ குப்பைகள் சேகரிக்கப்பட்டு அவை ஊராட்சி ஒன்றிய தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மாணவிகளுக்கு யோகா பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. பெண்களுக்கான சோப் மற்றும் பினாயில் தயாரிக்கும் பயிற்சி நடத்தப்பட்டது. நாட்டு நலப்பணித்திட்டத்தின் சிறப்புகள் பற்றியும் இதன் மூலம் மாணவியரின் ஆளுமை மேம்பாட்டுத்திறன் உயர்வது பற்றியும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பாண்டி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இக்கிராம மக்களுக்கு இந்த சிறப்பு முகாமின் மூலம் கண்மருத்துவ முகாம் நடைபெற்றது இதில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். கிராம செயலர் திரு.பாண்டி மற்றும் கிராம நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கீதா அவர்கள் சிறப்புரையாற்றி 7 நாள் சிறப்பு முகாமை நிறைவு செய்தனர். நாட்டுநலப்பணிதிட்ட அலுவலர்கள் முனைவர் பூமாதேவி, முனைவர்.ஜெயக்குமாரி ஞான தீபம், முனைவர் ரேணுகா, மற்றும் முனைவர் சுதா ஆகியோர் சிறப்பு முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைத்தார்கள்.

**கல்லூரி மைய நூலகம்**

கல்லூரி நூலகராக, முனைவர் மா. ரவிச்சந்திரன் செயல்பட்டு வருகிறார். எம் கல்லூரியில் ஒரு மைய நூலகமும், 15 துறை நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

தற்போது நூலகத்தில் சுமார் 75689 புத்தகங்கள், 200 ப்ராஜெக்ட் ரிப்போர்ட்ஸ், 18 பருவ இதழ்கள், 200 குறுந்தகடுகள், 5 செய்தித்தாள்கள் உள்ளன. அனைத்து புத்தகங்களும் Dewey Decimal Classification என்ற முறைப்படி பகுப்பாய்வு செய்யப்பட்டு, Bar-Code Label ஒட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு சிறந்த முறையில் அடுக்கிவைக்கப்பட்டு, பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் பயன் பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாணவியர்களுக்கும் பார்-கோடு லேபிள் (Bar-Code Label) ID CARD வழங்கப்பட்டு, நூலக மென்பொருள் (Library Management Software) மூலமாக புத்தகங்கள் வழங்கி திரும்பப் பெறப்படுகின்றன.

மைய நூலகத்தில் Automatic IN OUT Management System அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மைய நூலகத்தை பயன்படுத்த வரும் மாணவிகள் தங்களது அடையாள அட்டையை Scan செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு, நூலக மென்பொருள் (Library Management Software) மூலமாக புத்தகங்கள் வழங்கி திரும்பப் பெறப்படுகின்றன. மாணவிகள் மைய நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக நூலக மென்பொருளில் OPAC (Online Public Access Catalogue) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எம் நூலகம் ஆண்டு சந்தா செலுத்தி INFLIBNET – N-LIST இல் உறுப்பினராக உள்ளது. இதன்மூலம் 6000 E-Journals மற்றும் 30,00,000 E-Books பார்த்து பதிவிறக்கம் செய்ய இயலும். மேலும் இவ்வசதியினை இணையதள (INTERNET) வசதியுள்ள எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாணவியர்களை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து போட்டி தேர்வுகளுக்குத் தேவையான புத்தகங்கள் மிக அதிக அளவில் வாங்கப்பட்டு மேற்கோள் பிரிவில் (Reference Section) மாணவியர்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. 2024-2025 கல்வியாண்டில் அரசு நிதி 2,00,000/- திற்கு அனைத்து துறைகளுக்கும் சுமார் 486 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. Information and Library Network (INFLIBNET) ஆல் உருவாக்கப்பட்டுள்ள IRINS எனப்படும் web-based Research Information Management (RIM) service இல் அனைத்து பேராசிரியர்களின் Profilel இணைக்கும் பணியானது நமது நூலகரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. IRINS நாம் இணைவது நமது பேராசிரியர்களின் ஆய்வுப்பணிகளை மேலும் ஊக்குவிப்பதாக அமையும் எனக்கருதப்படுகிறது.

**கல்லூரி விடுதி**

கல்லூரியில் உள்ளுறை விடுதி, கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகிறது. இவ்விடுதியில் 330 இளநிலை மாணவிகளும், 47 முதுநிலை மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர். வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதில் விடுதி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இவ்விடுதிக் காப்பாளராக முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களும் துணை விடுதிக் காப்பாளராக விலங்கியல் துறை இணைப்பேராசிரியர், முனைவர் எ. எமிமாள் விக்டோரியா அவர்களும் பொறுப்பு வகித்து வருகின்றனர். இவ்விடுதி மாணவிகளுக்கு 21.12.2024 அன்று சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மதுரை பிரம்ம குமாரிகள் சங்கம் சார்பாகவும், சுகாதார மேலாண்மை குறித்து Tamil Nadu State Rural Livelihood Mission சார்பாகவும் சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. 24.01.2025 அன்று முதன்மை தபால் அலுவலகத்தில் இருந்து திருமதி ஜெயபிரியா சேமிப்பு கணக்குத் தொடங்குவது பற்றியும் வைப்பு நிதி சிறப்பு அம்சங்களையும் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். 28.01.2025 அன்று மாதவிடாய் கால சுகாதாரம் பற்றி திருமதி உமா மகேஸ்வரி (மருந்தாளர்) விடுதி மாணவிகளுக்குச் சிறப்புரை ஆற்றினார்கள்.

**கல்வி உதவித் தொகை**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மற்றும் மாற்றுத்திறனாளி மாணவியருக்கு அரசின் உதவித்தொகை பெற்று வழங்கப்படுகிறது. தமிழ்வழிக் கல்வி உதவித்தொகை தமிழ்வழியில் பயிலும் மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

| வ.எண் | உதவித்தொகை பெயர் | பயன்பெறும் மாணவிகளின் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் கல்வி உதவித்தொகை | 2999 | Rs.75,00,446 |
| 2. | மாற்றுத்திறனாளிகள் கல்வி உதவித்தொகை | 36 | Rs.4,32,000 |
| 3. | தாழ்த்தப்பட்டோர் கல்வி ஊக்கத்தொகை | 1224 | Rs.74,02,287 |
| 4. | தமிழ்வழிக் கல்வி ஊக்கத்தொகை | 965 | Rs.8,68,500 |
| 5. | பார்வையற்றோர் அறக்கட்டளை உதவித்தொகை (Help the Blind) | 9 | Rs.90,000 |

**அகத் தரமதிப்பீட்டுக் குழு**

அகத் தரமதிப்பீட்டுக் குழுவின் (IQAC) ஒருங்கிணைப்பாளராக மனையியல் துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் ஜ.பெ.ஷர்மிளா அவர்கள் செயல்பட்டு வருகிறார். IQAC மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள், கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் நிர்வாக நடைமுறைகளில் சிறந்து விளங்கும் அர்ப்பணிப்பை முன்னிலைப்படுத்துவதாக அமைகிறது. அகத் தரமதிப்பீட்டுக் குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள், அடையப்பட்ட முன்னேற்றம் மற்றும் நிறுவனத்தின் தர கலாச்சாரத்தை மேலும் வலுப்படுத்த திட்டமிடப்பட்ட எதிர்கால திசைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அகத் தரமதிப்பீட்டுக் குழு பல்வேறு துறைகளுடன் இணைந்து தொழில் துறை வாய்ப்புகள், தொழில் முனைவோர் வாய்ப்புகள், வங்கித் துறையின் வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு புரிதலையும் பயிற்சியினையும் வழங்கியது.

கிராமப்புற முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் சென்று கிராமங்களில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை–முறைகளைப் பற்றிய அறிவுறுத்தலை வழங்கியது. இந்நிகழ்ச்சியில் வாய்ஸ் டிரஸ்ட் NGO, மதுரையின் இயக்குநர் Dr.T.முருகேசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதாகவும் பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பற்றிய புரிதலை விரிவு படுத்துவதாகவும் பெஜிங் பிரகடனம் மற்றும் செயல் திட்டத்தின் 30 ஆண்டுகள் எனும் நிகழ்ச்சி அமைந்தது. இந்நிகழ்ச்சிக்கு சிவராஜ் வி. படில் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மற்றும் வழக்கறிஞர் திருமதி S.செல்வ கோமதி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். கல்வியில் AI பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் எதிர்காலம் பற்றிய பயிற்சி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. 14.02.2025 அன்று ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பன்னாட்டு புத்தக நன்கொடை தினத்தை முன்னிட்டு, நமது கல்லூரியின் அகத் தரமதிப்பீட்டுக் குழு மற்றும் வணிக நிர்வாகத் துறை இணைந்து 17.02.2025, அன்று புத்தக நன்கொடை தினத்தை சிறப்பாகக் கொண்டாடினர்.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முயற்சியால் மொத்தம் 716 புத்தகங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் 429 புத்தகங்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மீதமுள்ள புத்தகங்கள் விரைவில் அருகிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு நன்கொடையாக வழங்கப்படவிருக்கின்றன. இது மாணவர்களின் கற்றலையும் பேராசிரியர்களின் சமூக பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது.

**தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புக் குழு**

வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் குழவின் ஒருங்கிணைப்பாளராக மனையியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் இரா.சாரதா அவர்கள் செயல்பட்டு விருகிறார். மாணவிகளுக்கான தொழில் சார்ந்த நிகழ்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் வேலை வாய்ப்பு உதவிகளை வழங்குவதில் இக்குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளை (Group II மற்றும் Group IV) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் நமது கல்லூரியில் 22.07.2024 முதல் 21.02.2025 வரை நடத்தியது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் சுமார் 300 மாணவிகள் பயனடைந்தனர். இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக (LIC) 'மகளிர் தொழில் முகவர்' திட்டத்திற்கான வழிகாட்டல் அமர்வு 2024 13.09.2024 அன்று நடைபெற்றது. காப்பீட்டுத் துறையில் பெண்களை வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த அமர்வில் திரு.K.M.முரளிதுரை, CLIA, மகளிர் தொழில் முகவர் பணியில் உள்ள வாய்ப்புகளை விரிவாக விளக்கினார். இந்த நிகழ்வின் நேரடி விளைவாக, A. யோகலட்சுமி, மூன்றாமாண்டு இளங்கலை வரலாறு (E.M.), மகளிர் தொழில் முகவராக வெற்றிகரமாகப் பணி நியமனம் பெற்றார். அவர் தற்போது உதவித்தொகை (stipend) பெறத் தொடங்கி உள்ளார். இது அவரது தொழில் பயணத்தில் ஒரு முக்கிய தருணமாகக் கருதப்படுகிறது.

ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) மற்றும் மத்திய அரசு போட்டித் தேர்வுகள் குறித்த வழிகாட்டல் நிகழ்ச்சியும் "இந்திய விமானப்படையில் வேலைவாய்ப்புகள்" என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியும், வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன. இளநிலை முதலாம் ஆண்டு மாணவிகளுக்காக "LinkedIn Career Kickstarter" திட்டம் 19.12.2024 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவிகளுக்கு LinkedIn Premium சேவைகளை இலவசமாகப் பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் பங்கேற்ற 1,189 மாணவிகள் வேலை வாய்ப்புத் தொடர்பான செயல்களில் ஈடுபட இப்பயிற்சி வழிகோலியது. தொழில் மேம்பாடு மற்றும் பணியிட பயிற்சி நிகழ்வில் Amunet Talent Management நிறுவனர் திரு.ஆ.உதய், அவர்கள் தொழில் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு யுக்திகள் பற்றிய பல பயனுள்ள தகவல்களை வழங்கினார். வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் குழு, மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு, தொழில் சார்ந்த அறிவு மற்றும் திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு யுக்திகள் பற்றிய பல பயனுள்ள தகவல்களை வழங்கினார்.

**தேர்தல் விழிப்புணர்வுக் குழு (ELC)**

கல்லூரிக் கல்வி இணை இயக்குனரின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் கல்வியறிவு கழகம் மற்றும் Youth Welfare Club சார்பாக, மக்களவை பொது தேர்தல் 2024-ஐ முன்னிட்டு, ‘‘முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு’’ என்ற பொருளின் அடிப்படையில், 19.03.2024 அன்று கட்டுரை போட்டியும், ‘‘வாக்களிப்பதே சிறந்தது: நிச்சயம் வாக்களிப்பேன்’’ என்ற தலைப்பில் பேச்சுப்போட்டியும் நடைபெற்றன.

தேர்தல் கல்வியறிவு கழகப் பொறுப்பாசிரியர் மற்றும் வணிக நிர்வாகவியல் உதவிப் பேராசிரியர் முனைவர் ச.கவிதா, Youth Welfare Club பொறுப்பாசிரியர்கள், கணினி பயன்பாட்டியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். அ. விஜயா மற்றும் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.வே.இந்திராதேவி ஆகியோர் போட்டிகளை ஒருங்கிணைத்தனர்.

**தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (EDC)**

12.09.2024 MADITSSIA வில் (NASSCOM அறக்கட்டளையின் நிதியுதவியுடன்) நடைபெற்ற IT மற்றும் ITES துறையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த கருத்தரங்கமும், 21.09.2024 கலைஞர் நூற்றாண்டு நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "வணிகத்தில் மகளிர்" நிகழ்வும் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் சார்பில் நடத்தப்பட்டன. 18.12.2024 தமிழ்நாடு அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை மற்றும் தொழில்கள் மற்றும் வணிகத் துறை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட வழிகாட்டிகளுக்கான ஒரு நாள் பயிற்சியாளர் பயிற்சித் திட்டத்திலும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் நிதி உதவியுடன், ICAR, சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம், காமாட்சிபுரம், தேனி மாவட்டம், ஏற்பாடு செய்த 3 நாள் மலைப் பயிர்களின் மதிப்பு கூட்டல் குறித்த தொழில்முனைவோர் மேம்பாட்டுக் கருத்தரங்கிலும் முனைவர்.ச.கவிதா பங்கேற்றுள்ளார். கல்லூரியின் மூன்றாமாண்டு இளநிலை மாணவியர்களுக்காக "புதுமை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு ரூ. 5500 நிதியுதவி பெறப்பட்டது.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்**

கல்லூரியில் செயல்பட்டு வரும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின், தலைவராக நமது கல்லூரி முதல்வர் முனைவர்.சூவானதி அவர்களும், செயலாளராக, புவியியல் உதவிப்பேராசிரியர் முனைவர் ஆ.காந்திமதி, அவர்களும், பொருளாளராக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் திருமதி து.ஆறுமுகக்கனியும் பதவி வகித்து வருகின்றனர். நமது கல்லூரி பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கீழ் 28 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அலுவலகத்தில் 2 நபர்களும், ஆசிரியர்களாக 11 பணியாளர்களும், ஆய்வக உதவியாளர்களாக 6 நபர்களும், தூய்மைப்படுத்தும் பணியில் 6 நபர்களும், IQAC பணியில் 1 நபரும், UMIS தரவு பணியில் 1 நபரும், நூலகத்தில் 1 நபரும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டும் நமது கல்லூரியில் துறை வாரியாக பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் நடத்தப்படுகிறது. இக்கூட்டத்தில் மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு அவர்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் மாணவிகளிடம் வசூலிக்கப்படும் PTA கட்டணமும் நிர்ணயிக்கப்படுகிறது. கல்லூரியின் வளர்ச்சியில் மாணவர் நலனில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பங்கு அளப்பரியது.

**மாணவர் சமுதாயத் திட்டம் (CSS)**

கல்லூரியில் சமூகநலப் பணித்திட்டம் (CSS) ஆனது கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் திருமதி வெ.கபிலா அவர்களை உபதலைவராகவும், தமிழ்துறைத் தலைவர் முனைவர் சு.சந்திரா அவர்களையும் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தை.ஹெலன் கிறிஸ்டினா அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நம் கல்லூரியில் பயிலும் அனைத்துத் துறைகளையும் சார்ந்த, பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவியர்கள் 136 பேருக்கு சமூக நலத் தொண்டு நிதியிலிருந்து ரூ.350 வழங்கப்பட்டுள்ளது.

**நுகர்வோர் மன்றம்**

நுகர்வோர் மன்ற செயலாளராக கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.சூ.வானதி அவர்களும், நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளராக பொருளியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் மு.அருணா மற்றும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் தெ.ரீனா அவர்களும் செயலாற்றி வருகிறார்கள். 27.09.2024 அன்று "நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும், 28.09.2024 அன்று "விளம்பரங்கள் நுகர்வோரை எவ்வாறு தாக்குகிறது" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் மற்றும் 30.09.2024 அன்று "நுகர்வோருக்கு எது சிறந்தது ஆன்லைன் ஷாப்பிங் அல்லது கடைமுறை ஷாப்பிங்" என்ற தலைப்பில் பட்டிமன்ற போட்டியும் நடைபெற்றது. இப்போட்டிகளில் பல்வேறு துறையைச் சார்ந்த மாணவிகள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் கல்லூரி முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஆறு மாவட்டங்களைச் (மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்) சார்ந்த கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலமாக மாவட்ட அளவிலான நுகர்வோர் விழா கொண்டாடப்பட வேண்டும் என சட்டப்பேரவையில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் 27.04.2024 அன்று அறிவிக்கப்பட்டது. 12.02.2025 அன்று மண்டல அளவில் நுகர்வோர் திருவிழா நமது கல்லூரியில் "நுகர்வோருக்கான நியாயமான மற்றும் பொறுப்பான செயற்கை நுண்ணறிவு" என்ற தலைப்பினை மையமாகக் கொண்டு ஓவியம் வரைதல் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் "வாசகம்/ மேற்கோளுரை/ இலக்குரை" போன்ற நான்கு தலைப்புகளில் போதிய அளவு நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வு பெறும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

இத்திருவிழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாநகராட்சி மேயர், மதுரை மாநகராட்சி துணை மேயர், மண்டலத் தலைவர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வழங்கல் துறை அதிகாரிகள், நமது கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நுகர்வோர் திருவிழாவில் கண்காட்சி மற்றும் கலைநிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பட்டது.

மேலும் பேராசிரியர் முனைவர் S.அமுதா, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் எமது கல்லூரியைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர் மு.அருணா, பொருளியல் துறை அவர்களும் நுகர்வோர் விழிப்புணர்வு பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

**தாத்தா பாட்டி மற்றும் மாணவியர் குழு**

25.03.2025 அன்று தாத்தா பாட்டி மன்றம் நிகழ்வில் முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கோ.விஜெயம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சு.வானதி அவர்கள் தலைமையுரையாற்றி விழாவினைச் சிறப்பு செய்தார். பொருளியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு.அருணா அவர்கள் சிறப்புரையாற்றினார். விழாவிற்கு வருகை புரிந்த தாத்தா பாட்டி மற்றும் மாணவியர் பின்னூட்டம் மகிழ்வுடன் வழங்கினர். விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ம.கலையரசி நன்றியுரை வழங்கினார்.

**நிச் மன்றம்**

விலங்கியல் துறையைச்சார்ந்த 12 மாணவ தன்னார்வலர்களும், நிச் கிளப்பின் ஒருங்கிணைப்பாளர் விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர்.திருமதி ஜோதி சாம் அவர்களும் இணைந்து வைகை நதியில் இந்த வருடம் மேலை நாடுகளிலிருந்து வலசை வந்திருக்கும் பறவைகளின் கணக்கெடுப்பில் கலந்து கொண்டனர். 30.01.2025 அன்று அதிகாலை 6.30 - 8.30AM வரை இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**மகளிர் தினவிழா**

மகளிர் மேம்பாட்டுக் குழுவும், தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறையின் கீழ் உள்ள கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியமும் இணைந்து உலக மகளிர் தினவிழாவை 08.03.2025 அன்று கல்லூரியில் நடத்தினர். இந்நிகழ்வில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா IAS அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்கள்.

**மாணவியருக்கான ஆற்றுப்படுத்தல் மன்றம்**

பாலின உணர்திறன் மற்றும் உள்ளக புகார் குழு சார்பாக, உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் சட்ட உதவி மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து, முதலாமாண்டு இளநிலை மற்றும் முதுநிலை மாணவியருக்கான சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி 04.09.2024 அன்று நடத்தப்பட்டது. 1300 மாணவியர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள், போக்சோ சட்டம், பாலினம் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் இணைய வழி குற்றங்கள், பாலியல் துன்புறுத்தல்களை தவிர்ப்பது பற்றிய தகவல்களை சட்ட வல்லுநர்கள் திரு.P.ஆண்டிராஜ், திரு. கு.சாமிதுரை மற்றும் திரு. S. வினோத் ஆகியோர் பகிரந்து கொண்டனர். பேரவை சார்பாக 30.01.2025 அன்று நடைபெற்ற ஆற்றுப்படுத்துதல் நிகழ்வில் சிறப்பு விருந்தினரான தன்னம்பிக்கைப் பேச்சாளர் திரு.ஜெகன் அவர்கள் மாணவியரை ஆற்றுப்படுத்தி உரையாற்றினார்.

**முன்னாள் மாணவியர் சந்திப்பு**

60ஆம் ஆண்டு வைர விழாவின் ஒரு நிகழ்வாக "முன்னாள் மாணவியர் சங்கமம் - 2025", 29.03.2025 அன்று கயல் அரங்கில் முதல்வரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு கல்லூரியின் முதலரும்பு என்பதால், இந்நாள் மாணவியருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் சமூகத்தில் தங்கள் அறிவுத்திறனால் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் முன்னாள் மாணவியர் அனைத்து துறையிலிருந்தும் அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிகழ்வில் முன்னாள் மாணவியர் 464 பேர் தங்கள் வருகையைப் பதிவு செய்து கொண்டனர். தென்சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பெருமைமிகு முன்னாள் மாணவி ஆங்கிலத்துறை (1980-1983) மாண்புமிகு டாக்டர்.தமிழச்சி தங்கப்பாண்டியன் ஒளிக்காட்சி மூலம் வாழ்த்துரை வழங்கினார். ஆலம் விழுதுகளான முன்னாள் மாணவியர் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒருவர் வீதம் 15 துறைகளிலிருந்து 15 பேர் தங்கள் அனுபவங்களையும், நினைவுகளையும் மதிப்புமிக்க கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.

இயற்பியல் துறையின் முன்னாள் மாணவியும் இந்நாள் கல்லூரி முதல்வருமான முனைவர் சூ.வானதி அவர்கள் இயற்பியல் துறைக்கு ஸ்பெக்ட்ரோமீட்டர் ஆய்வகக் கருவிகளைத் தன் பங்களிப்பாக வழங்கினார். மனையியல் துறையின் முன்னாள் மாணவியர் தங்கள் துறைக்கு நமது கல்லூரியின் இலட்சனையை மர சிற்பமாக செய்து வழங்கினார். தாவரவியல் துறையின் முன்னாள் மாணவியர் தங்கள் துறைக்கு PODIUM நினைவுப் பரிசாக வழங்கினர். நமது கல்லூரி வளாகத்தை இருந்த இடத்திலிருந்து மீண்டும் பார்வையிடுவதற்கு ஒரு வாய்ப்பாக மெய்நிகர் வளாகச் சுற்றுலா ஒளிபரப்பப்பட்டது. கல்லூரி வளாகத்தில் "சுயமி" எடுத்துக் கொள்வதற்கு சுயமி முனையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. முன்னாள் மாணவியர் அவற்றில் சுயமி எடுத்து மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியை ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ.இராஜேஷ்வரபுஷ்பம் மற்றும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.சமீன் பானு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்த தமிழ்த்துறையின் தலைவரும் தேர்வுக் கட்டுப்பாட்டாளருமான முனைவர் சு.சந்திரா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**தொல்லியல் மரபு மன்றம்**

தமிழக அரசின் அறிவுறுத்தலின் படியும், கல்லூரி கல்வி ஆணையரின் ஆணையின் படியும் தொல்லியல் மரபு மன்றம் 20.02.2025 அன்று துவங்கப்பட்டது. மாவட்ட தொல்லியல் அலுவலர் திருமதி தீ.ஆனந்தி அவர்கள் "தமிழர்களின் தொன்மையும் மதுரையும்" என்ற தலைப்பில் உரை ஆற்றினார். மேலும் 14.03.2025 அன்று "வரலாற்று நினைவு சின்னங்களை பாதுகாப்பத்தில் மாணவிகளின் பங்கு" என்ற தலைப்பில் அனைத்து துறை மாணவிகளுக்கும் பேச்சுப் போட்டி நடைபெற்றது. முதல் மூன்று பரிசு பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழும், பரிசு புத்தகங்களும் வழங்கப்பட்டன. தொல்லியல் மரபு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ப.செல்வி; செயல்பட்டு வருகிறார்.

**அறிவியல் மன்றம்**

கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், வேதியியல் துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் ச.மீனாட்சி அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும், கணிதத் துறை இணைப்பேராசிரியர் முனைவர் இரா.பத்மாவதி மற்றும் விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி.ந.அமுதா அவர்களை செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. 19.02.2025 அன்று தேசிய அறிவியல் தினத்தை கொண்டாடும் விதமாக சிறப்புரை ஏற்பாடு செய்யப்பட்டது. "நரிஸ் டு பிளரீஸ் பில்டிங் ஹெல்த் த்ரு நியூட்ரிஷியன்" என்ற தலைப்பில் திருமதி சு.சாரதா, இணைப்பேராசிரியர், மனையியல் துறை, அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

**தன்னாட்சிக் குழு**

முதல்வர் அவர்களின் தலைமையில், கல்லூரியின் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாக இயற்பியல் துறை இணைப்பேராசிரியர் க.செல்வராணி, மற்றும் ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு.ஜாகிரா பானு ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். 2024-2025 ஆம் கல்வி ஆண்டின் ஆறாம் பருவத்தில் நான் முதல்வன் பாடத்திட்டத்தை அமல் படுத்துவதற்கான வழிவகை குறித்தும் 2025 - 2026ஆம் ஆண்டின் கல்வி ஆண்டிற்கான பாடத்திட்டக் குழு கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாகவும் பாடத்திட்ட மேம்பாட்டு குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் மாணவியரின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான பாடத்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. கல்லூரி மாணவியரின் பல்வகை திறன்களை வளர்க்கும் விதமாக செயல்படும் அனைத்து துறை மன்றங்கள், சங்கங்கள், ஆற்றுப்படுத்துதல் குழு வேலைவாய்ப்பு வழிகாட்டிக் குழு, இணையக் குழு, அறிவியல் மன்றக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு அவைகளின் செயல்முறைகளுக்கு ஆட்சி மன்ற நிலைக் குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுக் குழு, நிதிக்குழு மற்றும் ஆட்சிக்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**பாரதி விழா**

11.12.2024 அன்று மகாகவி பாரதியாரின் 142ஆவது பிறந்த நாள் விழா முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறையால் நடத்தப்பட்டது. இவ்விழாவில் வழக்கறிஞர் திரு.கு.சாமிதுரை அவர்கள் "பன்னாட்டுப் புலவன் பாரதி" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**முத்தமிழ் விழா**

28.03.2025 அன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில், பேரவைத் துணைத்தலைவர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பொறுப்பு முதல்வர் சு.சந்திரா அவர்கள் தலைமையுரையாற்ற, முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையின் பேராசிரியர்கள் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களால் எழுதப்பட்ட "இலக்கியங்களில் கலைகள்" எனும் நூல் வெளியிடப்பட்டது. மதுரை அகில இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றி பணி நிறைவு பெற்ற "சண்முக ஞானசம்பந்தன்" அவர்களின் தலைமையில் "பெண்களின் வெற்றிக்குத் தேவை கல்வியா?, செல்வமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது .

**மொழிநாள் விழா**

மொழிநாள் விழா 21.02.2025 அன்று முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையில் நடைபெற்றது, திருக்குறள் சொ.கு.முருகேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு "எண்கவனகம்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றில் இடம்பெற்றுள்ள குறட்பாக்கள் குறித்த மாணவியரின் கேள்விகளுக்கு விடையளித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

**மாணவர் கூட்டுறவு பண்டகச் சாலை**

மாணவர் கூட்டுறவு பண்டகச் சாலையின் தலைவராக கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்களும், செயலராக பொருளியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர்.ச.துர்க்காதேவி மற்றும் பொருளாளராக வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி.தெ.ரீனா ஆகியோரும் செயல்பட்டு வருகின்றனர். இப் பண்டகச் சாலை மூலமாக மாணவிகளுக்கு தேவையான எழுது பொருள்கள், புத்தகங்கள், ரெக்கார்டு நோட் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்தபட்ச லாபத்தோடு மாணவியர் நலன் கருதி செயல்படுவதால் இப்பண்டகச் சாலை மாணவிகளுக்கு நன்மை பயக்கின்றது.

**நுண்கலை மன்றம்**

விலங்கியல் துறை 2024-2025ஆம் ஆண்டிற்கான நுண்கலை போட்டிகளை நடத்தியது. வெளியரங்கப் போட்டிகளான பொடிக்கோலம், வண்ணக்கோலம், சிகை அலங்காரம், மலர் அலங்காரம், நெருப்பில்லா சமையல், பாடல் போட்டிகள் போன்றவை 25.02.2025 மற்றும் 04.03.2025 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டன. உள்அரங்கப் போட்டிகளான பரதம், நாட்டுப்புற நடனம், குழு நடனங்கள், தமிழ் மற்றும் ஆங்கில நாடகங்கள் போன்றவை 27.02.2025 மற்றும் 28.02.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. பல்வேறு துறைசார்ந்த மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றுத் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

**கல்லூரிச் சந்தை**

வணிக நிர்வாகவியல் துறை மற்றும் மதுரை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து 17.12.2024 மற்றும் 18.12.2024 ஆகிய தேதிகளில் கல்லூரி சந்தையை நடத்தியது. இயக்கத்தின் மதுரைக் கிளையில் உதவி இயக்குநராக பணிபுரியும் திருமதி .தமிழரசி, அவர்கள் சந்தையைத் துவக்கி வைத்தார். இந்த அங்காடியில் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 45 சுய உதவிக் குழுக்களும், நம் கல்லூரியைச் சேர்ந்த 19 மாணவியர்களும் கலந்து கொண்டனர். வணிக நிர்வாகவியல் துறை மாணவர்கள் தங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்த உதவினார்கள். கல்லூரிச்சந்தையின் மொத்த விற்பனை மதிப்பு ரூ.1,80,000 ஆகும்.

**ரோட்ராக்ட் அவை**

நம் கல்லூரியின் ரோட்ராக்ட் அவை, வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் திருமதி பா. மாரியம்மாள் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு மதுரை இன்னர்வீல் TANDEM Informatics அமைப்பு என்ற நிறுவனத்துடன் இணைந்து நடத்திய இலவச Dip in Computer Designing Photoshop பயிற்சி வகுப்பில் முதல் கட்டமாக ஏ.மனீஷா I MBA, எம்.தர்ஷினி I MA English, ஆர்.செண்பகவள்ளி III BA History ஆகிய 3 மாணவிகளும், இரண்டாம் கட்டமாக கே.நாகலெட்சுமி I MCA, எம்.தபீா பானு I MCA, எஸ்.ஆர்த்தி II MA English, கலையரசி III CSc, காயத்ரி II CSc, எஸ்.அஷயா II BBA ஆகிய 6 மாணவிகளும் கலந்துகொண்டு கிரேடு தேர்ச்சி பெற்றனர். பயிற்சித்திறன் பெற்ற மாணவிகளைக் கொண்டு சக மாணவியர்களுக்கும் பயிற்றுவிக்கப்பட்டது. 27.03.2025 அன்று தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் தங்கிய கூடத்திற்கு செல்லும் வழியில் உள்ள முட்புதர்கள் அனைத்தும் மதுரை கார்ப்பரேஷன் மேற்கு மண்டலம் அவர்களின் உதவியுடன் சுத்தம் செய்யப்பட்டது.

**பொறுப்பாசிரியர் மாணவியர் கூட்டம்**

கல்லூரியில் அனைத்துத் துறைகளிலும் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஓர் ஆசிரியர் தம் வகுப்பு மாணவியர்களுக்குப் பொறுப்பாசிரியராக இருந்து மாணவியர் நலம் பேணும் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் ஆலோசனைக் கூட்டங்கள் அனைத்துத் துறைகளிலும் நடத்தப்படுகின்றது. பொறுப்பாசிரியர்கள் மூலம் மாணவியருக்குக் கல்வியின் முக்கியத்துவம், ஒழுக்கம், காலந்தவறாமை பற்றியும் அவ்வப்போது அறிவுறுத்தப்படுகிறது. பொறுப்பாசிரியர்கள் தேவையான நேரங்களில் பெற்றோர்களை அழைத்து மாணவியர்களின் நடவடிக்கை மற்றும் அவர்களது கல்வி முன்னேற்றத்தைப் பற்றி ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்குகின்றனர்.

இக்கல்வியாண்டில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும், மேம்பாட்டிற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் காரணமாக உள்ள தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக மானிய குழுவிற்கும், கல்லூரியின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் உறுதுணையாக நிற்கும் எம் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கும், மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களுக்கும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கும், முன்னாள் மாணவியர் சங்கத்திற்கும், கல்லூரியின் மேன்மைக்கு அரும்பாடுபடும் துறைத்தலைவர்களுக்கும், இருபால் பேராசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும், இதரப் பணியாளர்களுக்கும், ஊடகவியல் நண்பர்களுக்கும், மற்றும் மாணவியர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பாக என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பு தான் உன் பலவீனம் என்றால்
இந்த உலகின் மிகச் சிறந்த
பலசாலி நீ தான்.
- அன்னை தெரசா



- M.Swetha
III BBA

## பெண்

பெண்ணே,
நீ கவிதை அல்ல காவியம்
படைத்தவனும் நினைத்து பெருமைப்படும்
ஓவியம்
கவிதைகளை படைக்கும் கவிஞர்களின்
காதலாய் வாழ்கிறாய்....
மனிதகுலம் இவ்வுலகில் தோன்ற
காரணமாக
அமைகின்றாய்...
இவ்வுலகையே மாற்றி அமைக்கும் ஆற்றல்
உன்னிடத்தில்!
இருந்தும் சமூகத்தை கண்டு ஏனோ
தயக்கம் கொள்கின்றாய்...
துணிந்து செயல்படு உன்னால்
இயன்றவற்றை செய்!
உன்னை அடக்கி ஆள நினைக்கும் சமுதாயத்தின்
வேரை அடியோடு
அறுத்திடு...
பெண்களை விட உயர்ந்த சக்தி எதுவும் இல்லை
என்பதை நிரூபித்து விடு!..

ம.பிரியதர்ஷினி
II B.Com Shift I

குரல்களின் கலகலப்பு, காய்கறி, பழங்களின் வாசம்,
மக்களின் சிரிப்பு, எளிய வாழ்வின் உண்மையான அரங்கம் .... சந்தை



- M.Nava Keerthana
III BA Economics (TM)




I.Jahara Imrana
III BA.Economics (TM)



N.Surya Kala
III BA Economics (TM)

## மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா...



- V.Jeya Varsha
II MBA



- S.Arunadevi
III B.Com Shift I

**Calligraphy**




S.Lakshmi Gayathri
II BA English Shift II



K.Mousiga
III B.Com Shift II

## கல்வி

கல்வி ஒரு மனிதனை மிகைப்படுத்தும் ஒரு வலிமையான ஆயுதமாகும். அக்கல்வியினால் மனிதன் பெறும் அறிவு பல. அறிவு பல சூழலில் மனிதனுக்கு பெரிதும் உதவி அவனுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிவகுக்கிறது. பெரும்பாலும் அறிவை ஒரு மனிதன் கல்வி மற்றும் அனுபவத்தின் மூலம் பெறுகிறான்.

பிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவஞானி "அறிவு" என்பதை நியாயப்படுத்தப்பட்ட உண்மையான நம்பிக்கை" என்று வரையறுத்தார். பெஞ்சமின் புளூம் என்பவர் அறிவுசார் செயல்பாட்டினை பொருத்து ஒருவர் பெற்றிடும் அறிவு ஆறு நிலைகளில் அமைந்திடும் என்பதை கண்டறிந்தார். அவை நினைவில் கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல், பகுப்பாய்தல், மதிப்பு செய்தல், உருவாக்குதல் ஆகும். இதில் நினைவில் கொள்ளுதல் தாழ்ந்த நிலையிலான அறிவு என்றும் உருவாக்குதல் உயர்நிலை அறிவு என்றும் கருதப்படுகிறது.

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினங்களையும் ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினங்கள் எனத் தனித்தனியாக வகைப்படுத்துகின்றனர். அதை மனிதன் தனது கல்வியின் மூலம் அறிந்து கொள்கிறான். ஆறறிவு உயிரினமாக கருதப்படும் மனிதன் இச்சமுதாயத்தில் தனக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்க தனது அறிவாற்றலின் மூலம் பல நுணுக்கமான யுக்தியை பயன்படுத்தி தனது வாழ்க்கையில் முன்னேறுகிறான். கல்வியினால் பெறும் அறிவு ஒரு மனிதனை ஊக்குவிக்கவும், வழிகாட்டவும் அதிகாரம் வழங்கவும் முடியும்.

கல்வியின் மூலம் ஒரு மனிதன் ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளில் சிறந்து விளங்குவதும், மனப்பாடம் செய்வதும் ஒரு வகையான திறனே தவிர அது ஒரு போதும் அறிவு என்று கருதப்படுவதில்லை. கல்வியைப் போல் அறிவும் ஒரு மிகப்பெரிய சக்தியாகவும், அறிவு என்னும் ஆற்றலை மனிதன் பயன்படுத்தி பல சிறந்த படைப்புகளை தினம் தினம் உருவாக்கிக் கொண்டே இருக்கிறான்.

அறிவு என்பது ஒரு ஆற்றல் ஆகும். தனக்கு தெரியாத ஒன்றை தெரிந்து கொள்வதற்கான ஒரு ஆர்வத்தை தூண்டும் ஒரு வகையான கருவியாகும். "கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு", அதுபோல "அறிவே ஆற்றல்" அவ்வறிவாற்றலால் மனிதர்கள் விண்ணிலும், மண்ணிலும் பல சாதனைகள் புரிந்து ஒரு மிகச் சிறந்த அறிஞராக விளங்குகின்றனர். அவர்களின் சாதனைப் படைப்புகள் அனைத்தும் "என்னே அறிவு" என்று நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. கல்வியினால் நாம் பெற்ற அறிவையும், அனுபவத்தினால் கிடைத்த அறிவையும் கொண்டு நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நிச்சயமாக இவ்வுலகத்தில் நமக்கென்று ஒரு சிறந்த இடத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையுடன் செயல்படுவோம். அறிவை பயன்படுத்துவோம்.


A.Nathiya
II MBA

## Zendoodle



R.Divyashree
II BA English Shift II

## Mandala Art



M.Kunguma Sujitha
II BA English Shift II

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !



M.Kaleeswari
II BA English Shift II



கை நுனியில் கலை மலர
காகிதத்தில் உயிர் துளிர்...
நிறமில்லா உலகிலும்
நிறைவாய் தெரியும் அழகு!

R.C.Jeeva Jothi
I BA Economics (TM)

## நடந்த வருடத்தின் நிகழ்வுகள் சில நிழற்படங்களாய்...



### ஆற்றுப்படுத்துதல்

30.01.2025 அன்று நடைபெற்ற ஆற்றுப்படுத்துதல் நிகழ்வில் தன்னம்பிக்கை பேச்சாளர் திரு.ஜெகன் உரையாற்றினார்.



### சுதந்திர தின கொடியேற்றம்

அல்லிப்பூப் போல் அத்திப்பழம் போல் அழகாய் அரிதாய் மலர்ந்து மேதினியில் மகிமை மிக்கக் குடியரசாய் நிமிர்ந்து நிற்கும் எம் பாரத மணித்திருநாட்டின் சீர்மிகு கொடியை ஏற்றி 15.08.2024 அன்று நடைபெற்ற 78வது சுதந்திர தின விழாவில் கல்லூரி முதல்வர் சூ.வானதி அவர்கள் கொடியேற்றும் நிகழ்வு.



### 155 வது காந்தி ஜெயந்தி விழா

“இவர் போல் யாரென்று” விம்மித் தினம் வியக்கும் நம் தேசப்பிதா பிறந்த நாளான 03.10.2024 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் காந்தி நினைவு அருங்காட்சியக செயலர் கே.ஆர்.நந்தாராவ் மற்றும் செந்தமிழ் கல்லூரியின் துணை முதல்வர் ரேவதி சுப்புலெட்சுமி பங்கேற்ற நிகழ்வு.

## பேரவை துவக்க விழா



15.10.2024 அன்று பேரவை துவக்க விழாவில் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியின் பொருளியல் துறை இணைப் பேராசிரியரும், எமது கல்லூரியின் முன்னாள் மாணவியுமான முனைவர் திருமதி சுகந்தா ராமமூர்த்தி அவர்கள் பங்கேற்ற நிகழ்வு.




## பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு

25.11.2024 முதல் 10.12.2024 வரை 16 நாட்கள் நடைபெற்ற பயிற்சியில் வழக்கறிஞர் திருமதி. எஸ்.செல்வகோமதி அவர்கள் விழிப்புணர்வு உரையாற்றினார்.



## பொங்கல் தின விழா

பொங்கும் பால் போல மகிழ்ச்சி பொங்க தமிழரின் பாரம்பரியம் பேசும் பொங்கல் விழாவில் எம் மாணவியரின் கொண்டாட்ட நிகழ்வு



## குடியரசு தின விழா

ஆனந்த சுதந்திரம் ஆண், பெண் இருவருக்குமானது என்று நிமிர்ந்த நடையில் முன்னத்தி ஏராய் முன் செல்லும் எம் கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் மற்றும் மாணவியர் 26.01.2025 அன்று குடியரசு தின அணிவகுப்பு.

## சர்வோதய தின விழா

30.01.2025 அன்று நடைபெற்ற சர்வோதய தினவிழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்.






## 46வது பட்டமளிப்பு விழா

22.02.2025 அன்று காமராசர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் முனைவர் ம.ராமகிருஷ்ணன் எம்.இ., பி.எச்.டி., அவர்கள் பங்கு பெற்று சிறப்பு செய்த நிகழ்வு.

## நுண்கலை விழா





27.02.2025 அன்று நடைபெற்ற நுண்கலை மன்ற விழாவில் பங்கேற்ற தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மதுரை, குரலிசை உதவிப்பேராசிரியர் முனைவர் A.பத்மாகுமாரி அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார். கலையில் கிளர்ந்து உயிர்க்கும் கல்வி காலத்துக்குமானது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் எம்மாணவியரின் கலைத்திறன்களை வெளிப்படுத்தும் நிகழ்வு.

## மகளிர் தின விழா




08.03.2025 அன்று நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்திருமதி.மா.செள. சங்கீதா IAS அவர்கள் அருகில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாறுவேடம் பூண்டு வந்த மாணவியர்.

## உலக மகளிர்சுய உதவிக்குழு

தற்சார்பு பெண்களுக்கோர் அற்புத அணிகலன், 08.03.2025 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களால் அமைக்கப் பட்டிருந்த விற்பனை அரங்கில் கண்காட்சிப் பொருள்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.செள.சங்கீதா IAS அவர்களுடன் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் பார்வையிடும் நிகழ்வு.



## முத்தமிழ் விழா




உயிரில் கலந்த உணர்வாய் நினைந்த பொழுதில் சிந்தையில் கனியும் கன்னல் சுவையாய் நீக்கமற நெஞ்சில் நிறைந்திருக்கும் எம் தாய்த்தமிழின் மாண்பைப் போற்ற முத்தமிழ் விழா. 28.03.2025 அன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினர் மற்றும் பட்டிமன்ற நடுவர் சொற்கொண்டல் சண்முக ஞானசம்மந்தன் அவர்கள் பட்டிமன்றத்தைத் தொடங்கி வைக்கும் நிகழ்வு.

## கல்லூரி நாள் விழா

பெண் சக்தி போற்றும் பெருமை மிகு மதுரையில் ஆலும், வேலும் சோலை போல் அடர் நிழலும் கொண்டு ஆண்டுதோறும் பெண் சக்தி பெருக்க கல்விப்பணி ஆற்றும் எம் மீனாட்சிக் கல்லூரிக்கென ஒரு நாள், ஒரு விழா, கல்லூரி நாள் விழா. 09.04.2025 அன்று மதுரை HCL தொழில்நுட்ப நிறுவனத்தின் இணைத் துணைத் தலைவர் திரு.திருமுருகன் சிறப்புரை நிகழ்த்தும் நிகழ்வு.







## விளையாட்டு விழா

11.04.2025 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர், திரு.சி.ரமேஷ் மாணவிகளை ஊக்கமளித்து சிறப்புரையாற்றும் நிகழ்வு.

## பேரவை நிறைவு விழா

நம்மை நாமே நல்லாட்சி செய்யப் பேரவை மூலம் பாடம் படிக்கிறோம் நாங்கள் என்று 12.04.2025 அன்று நடைபெற்ற பேரவை நிறைவு விழாவில் மாணவியர் பேரவைத் தலைவி விலங்கியல்துறை மூன்றாமாண்டு ஆங்கில வழி மாணவி செல்வி க.கலைபவித்ரா நன்றியுரை கூறும் நிகழ்வு.



## 47வது பட்டமளிப்பு விழா

16.04.2025 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ) பேராசிரியர் முனைவர் முத்தையா எம்.ஏ.,எம்.பி.ஏ., பி.எச்.டி., அவர்கள் கலந்து கொண்டு மீனாட்சி சிலை பரிசு வழங்கினார்.










## அமைச்சர் பங்கேற்பு

26.11.2024 அன்று உயர் கல்வித்துறை அமைச்சர் திரு கோவி.செழியன் அவர்கள் கல்லூரியின் உதவி மையம், கல்லூரி ஆசிரியர்களுக்கான பொது கலந்தாய்வு இடமாறுதல் ஆணை வழங்குதல் மற்றும் போதை தடுப்புக்குழு தொடங்கும் நிகழ்வில் கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி E.சுந்தரவல்லி IAS அவர்கள் பங்கேற்றார்.

# விளையாட்டுப் போட்டிகளில் எம் கல்லூரி மாணவிகள் பெற்ற பரிசுகள்



கலைஇளமணி விருது பெறும்
மாணவி செல்வி
M.நந்தினி III B.A.Tamil (Shift I)



பல்கலைக்கழக கபாடி
போட்டியில் 3-ம் இடம்




பல்கலைக் கழக பூப்பந்து
போட்டியில் 3-ம் இடம்




அகில இந்திய பல்கலைக்கழக
பல்வேறு போட்டிகளில்
பரிசு பெற்ற மாணவிகள்




பல்கலைக்கழக வளைகோல் பந்து
போட்டியில் 3-ம் இடம்



பல்கலைக்கழக கையுந்துப்பந்து
போட்டியில் 3-ம் இடம்

# நாட்டு நலப்பணித் திட்டம்




தேசிய ஒருமைப்பாட்டு முகாம்




யோகா தினம்



R.நவகோகிலா II B.Sc. Comp.Sci
ஏற்காட்டில் சாகசப் பயிற்சி



16.03.2025 அன்று கள்ளந்திரியில்
நடைபெற்ற கண் பரிசோதனை முகாம்.



# தேசிய மாணவர் படை







M.நந்தினி B.A.Tamil (Shift II)
RDC 2025






CDT. R.Amutha II B.C.A.
Ooty Trekking 2024

# போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவியர்கள் (2024- 2025)






**K.Narmadha**
M.A.Eng (2022-2024)
UGC NET Dec 2024



**S.Hephzibah Heaven Rose**
MA Eng (2020 - 2022)
UGC NET Feb 2025



**R.Archana**
B.A.Eng (2017-2020)
TNPSC Grp II - Asst. Chief Education Office



**M.Natchathra**
Bsc Maths (TM)
IBPS PO 2024
Bank of Maharashtra



**B.Shanmugapriya**
BCom Shift I (2018-2021)
Customer Service Associates
Canara Bank



**R.Dhanya**
B.Com Shift -I
2018-2021
Asst.Manager
Central Bank of India



**V.Abirami**
BCA 2019-2022
Military Police



**S.Najeema Begam**
BA Eco (EM) 2020-2023
Steno Typist - Grp II
Deputy Directorate of Prosecution Dept.



**D.Vishnu Devi**
Msc Maths (2018-2020)
Typist - TNPSC Grp IV



**S.Mahadevi**
Bsc Maths (TM) (2019-2022)
Asst.Inspector in Local
Fund Audit - TNPSC Grp IIA



**N.Reshma**
Bsc Chem (EM) (2019-2022)
Sanitary Inspector,
DMA Corp.



**S.Annapoorani**
B.Com(2019-2022)
Cost & Management
Accountant



**R.Anbarasi**
MBA (2018-2020)
IBPS SO 2024
Marketing
Specialist Officer

போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!. உங்கள் கடின உழைப்பும், விடாமுயற்சியும் இன்று இனிய பலனளித்துள்ளது. தோல்விகளைத் தாண்டி வெற்றியை அடைந்த உங்கள் துணிச்சல் பாராட்டத்தக்கது. இலக்கை நோக்கி உறுதியுடன் நடந்த உங்கள் பயணம் மற்றவர்களுக்கு ஊக்கமாக உள்ளது. ஒவ்வொரு நாளும் செய்த சிறிய முயற்சிகளே இன்று பெரிய சாதனையாக மாறியுள்ளது. உங்கள் வெற்றி, உங்கள் குடும்பத்திற்கும், கல்வி நிறுவனத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது. நம்பிக்கை, ஒழுக்கம், நேர்மை ஆகியவை உங்கள் சாதனையின் அடித்தளமாக உள்ளன. இனி வரும் சவால்களையும் இதே உற்சாகத்துடன் சமாளிப்பீர்கள் என நம்புகிறோம். உங்கள் அறிவும், திறமையும் சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டட்டும். மேலும் உயரங்களை அடைந்து வாழ்க்கையில் தொடர்ந்து சாதிக்க மனமார்ந்த வாழ்த்துக்கள் !!.

# மாற்றுத்திறனாளி மாணவியருக்கான சிறப்புப் போட்டிகள்













பல்வேறு பரிசுகள் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த
சிறப்புத் திறனாளி செல்வி M.நாககீர்த்தி வரலாற்றுத்துறை
இரண்டாமாண்டு மாணவி











# நான் முதல்வன் திட்ட செயல்பாடுகள்

நான் முதல்வன் Hackathon Winners




நான் முதல்வன் Foundation of Digital Marketing Classes










நான் முதல்வன் Mega Job Fair

# வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் குழு




27.01.2025 மற்றும் 28.01.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்ற Sureti Insurance Marketing Pvt.Ltd., நிறுவனம் நடத்திய வேலைவாய்ப்பு வளாகத் தேர்வில் தேர்வு செய்யப்பட்ட மாணவிகள்.




Career Opportunities in the Indian Airforce - Awareness Session




27.01.2025 LIC Mahila Career Agent நடத்திய புத்தொளி பயிற்சி




Railway Recriutment Board Examination நடத்திய புத்தொளி பயிற்சி




Linked in Career Kickstarter Programme




Placement Training Programme jointly organised with Amunet Talent Management for Final Year P.G Student

# நம் கல்லூரியில் சிறப்பாக பணிபுரிந்து பணி நிறைவு பெறும் பேராசிரியர்கள்



முனைவர் திருமதி மீ.முத்துராணி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை



முனைவர் திருமதி வ.சூரியகாந்தி
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை



முனைவர் திருமதி மு.பாப்பா
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை



முனைவர் திருமதி மு.அருணா
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை

# Proficiency Prize Winners 2024 - 2025

## Part 1 – Tamil

I Shift

Arts

| | | | |
|---|---|---|---|
| 1. | C.S. KARTHIKA | III BBA | I PRIZE |
| 2. | S.GAYATHRI | III B.A HISTORY (EM) | II PRIZE |

Science

| | | | |
|---|---|---|---|
| 3. | T.SRIPATHI | III B.Sc MATHS EM | I PRIZE |
| 4. | M.AARTHY | III B.Sc MATHS EM | II PRIZE |

Commerce

| | | | |
|---|---|---|---|
| 5. | K.VIJI | III B.Com Commerce | I PRIZE |
| 6. | M.J.JANEESHA | III B.Com Commerce | II PRIZE |

II Shift

Arts

| | | | |
|---|---|---|---|
| 7. | S.DHANUSHRI | III B.A ENGLISH | I PRIZE |
| 8. | R.SUNDARI | III B.A ENGLISH | II PRIZE |

Science

| | | | |
|---|---|---|---|
| 9. | S.LOKHADHARANI | III B.Sc COMP.SCI | I PRIZE |
| 10. | M.KALAIYARASI | III B.Sc COMP.SCI | II PRIZE |

Commerce

| | | | |
|---|---|---|---|
| 11. | A.ISWARYA | III B.Com Commerce | I PRIZE |
| 12. | S.RAGAVI | III B.Com Commerce | II PRIZE |

## Part 1 – Hindi

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 13. | P.BHUVANESHWARI | III B.C.A | I PRIZE |
| 14. | S.S.UVETHIKA DIVYA | III B.Sc COMP.SCI | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 15. | C.YOGASRI | III B.A ENGLISH | I PRIZE |
| 16 | R.MAHALAKSHMI | III B.A ENGLISH | II PRIZE |

**I Shift**

## Part II - English

**Arts**

| | | | |
|---|---|---|---|
| 17 | S.YUVASRI | III B.A TAMIL | I PRIZE |
| 18 | G.ABILASHA | III B.A. ENGLISH | II PRIZE |

**Science**

| | | | |
|---|---|---|---|
| 19 | M.VISHNUPRIYA | III B.Sc CHEM EM | I PRIZE |
| 20 | P.MONISHA | III B.Sc CHEM EM | II PRIZE |

**Commerce**

| | | | |
|---|---|---|---|
| 21 | M.J.JANEESHA | III B.Com | I PRIZE |
| 22 | M.KIRUTHIKA | III B.Com | II PRIZE |

**II Shift** **Arts**

| | | | |
|---|---|---|---|
| 23 | 1. R.SUNDARI<br>2. A.MANIMOZHI | III B.A. ENGLISH<br>III B.A TAMIL | I PRIZE |
| 24 | 1. S.DANUSHRI<br>2. S.HARINI | III B.A. ENGLISH<br>III B.A. ENGLISH | II PRIZE |

**Science**

| | | | |
|---|---|---|---|
| 25 | S.LOKHADHARANI | III B.Sc COMP.SCI | I PRIZE |
| 26 | M.KALAIYARASI | III B.Sc COMP.SCI | II PRIZE |

**Commerce**

| | | | |
|---|---|---|---|
| 27 | V.DHARSHINI | III B.Com | I PRIZE |
| 28 | S.MAHALAKSHMI | III B.Com | II PRIZE |

## Part III Major Subjects

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 29 | K.KALEESWARI | III B.A Tamil | I PRIZE |
| 30 | K.MAHATHI | III B.A Tamil | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 31 | A.MANI MOZHI | III B.A Tamil | I PRIZE |
| 32 | K.SELVAHARINI | III B.A Tamil | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 33 | B.NANDHINI | II M.A Tamil | I PRIZE |
| 34 | K.ALAGUMEENA | II M.A Tamil | II PRIZE |

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 35 | A.FATHIMA RIFANA | III B.A English | I PRIZE |
| 36 | R.SHOBIKA | III B.A English | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 37 | R.SUNDARI | III B.A English | I PRIZE |
| 38 | S.DHANUSHRI | III B.A English | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 39 | **K.NARMADHA** | **II M.A English** | **I PRIZE** |
| 40 | **S.AAMEENA HABSHA** | **II M.A English** | **II PRIZE** |
| 41 | **N.BHAVANISRI** | **III B.A History (EM)** | **I PRIZE** |
| 42 | **S.GAYATHRI** | **III B.A History (EM)** | **II PRIZE** |
| 43 | **M.ANGALAESWARI** | **III B.A History (TM)** | **I PRIZE** |
| 44 | **K.THEENA** | **III B.A History (TM)** | **II PRIZE** |
| 45 | **S.KIRUTHIKA** | **II M.A History** | **I PRIZE** |
| 46 | **N.SYED ALI FATHIMA** | **II M.A History** | **II PRIZE** |
| 47 | **M.SWETHA** | **III B.A Economics (EM)** | **I PRIZE** |
| 48 | **M.DURGA DEVI** | **III B.A Economics (EM)** | **II PRIZE** |
| 49 | **S.MONICA** | **III B.A Economics (TM)** | **I PRIZE** |
| 50 | **S.GOMATHI** | **III B.A Economics (TM)** | **II PRIZE** |
| 51 | **R.KEERTHANA** | **II M.A Economics** | **I PRIZE** |
| 52 | **E.GAYATHRI** | **II M.A Economics** | **II PRIZE** |

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 53 | **M J JANEESHA** | **III B.Com** | **I PRIZE** |
| 54 | **M KIRUTHIKA** | **III B.Com** | **II PRIZE** |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 55 | K MOUSIGA | III B.Com | I PRIZE |
| 56 | V DHARSHINI | III B.Com | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 57 | D DHANABACKIYAAKSHAYA | II M.Com | I PRIZE |
| 58 | P KEERTHIKA | II M.Com | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 59 | M JULIE | III BBA | I PRIZE |
| 60 | N JEEVA DURGADEVI | III BBA | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 61 | K VIJAYALAKSHMI | II MBA | I PRIZE |
| 62 | S JANANI | II MBA | II PRIZE |

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 63 | T SRIPATHI | III B.Sc Maths (EM) | I PRIZE |
| 64 | N MUNEESHWARI | III B.Sc Maths(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 65 | T ANITHA | III B.Sc Maths(TM) | I PRIZE |
| 66 | T KAVIPRIYA | III B.Sc Maths(TM) | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 67 | R KAMATCHI | III B.Sc Maths(EM) | I PRIZE |
| 68 | V SWETHA HARSHINI | III B.Sc Maths(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 69 | M SYLVIA | II M.Sc Maths | I PRIZE |
| 70 | M PRIYADHARSHINI | II M.Sc Maths | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 71 | M.SUMAIYA | III B.Sc Physics(EM) | I PRIZE |
| 72 | M.DHARANI | III B.Sc Physics(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 73 | R.TAMIL DHARANI | III B.Sc Physics(TM) | I PRIZE |
| 74 | T.KRISHNAPRIYA | III B.Sc Physics(TM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 75 | K.JANAGAI ALAGU SUNDARI | II M.Sc Physics | I PRIZE |
| 76 | B.VENNILA | II M.Sc Physics | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 77 | P.MONISHA | III B.Sc Chemistry(EM) | I PRIZE |
| 78 | M.VISHNUPRIYA | III B.Sc Chemistry(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 79 | S.YUVATHARANI | III B.Sc Chemistry (TM) | I PRIZE |
| 80 | A.SRIDHARSHINI | III B.Sc Chemistry(TM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 81 | B.PREETHIKA | II M.Sc Chemistry | I PRIZE |
| 82 | V.RENUKA | II M.Sc Chemistry | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 83 | G.G.DHARUNIYA | III B.Sc Zoo(EM) | I PRIZE |
| 84 | M.SAFIYA MURSHIDA | III B.Sc Zoo (EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 85 | R.ELAKKIYA DEVI | III B.Sc Zoo (TM) | I PRIZE |
| 86 | K.KAVIKAMEENA | III B.Sc Zoo (TM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 87 | F HAIZAR JAHAN | II M.Sc Zoo | I PRIZE |
| 88 | K JEEVITHA | II M.Sc Zoo | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 89 | N SEENATH NISHA BEGAM | III B.Sc Bot | I PRIZE |
| 90 | R KEERTHIKA | III B.Sc Bot | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 91 | S VANAPECHI | II M.Sc Bot | I PRIZE |
| 92 | B ABIRAMI | II M.Sc Bot | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 93 | M.ISHWARYA | III B.Sc Geo(EM) | I PRIZE |
| 94 | R.ANITHA | III B.Sc Geo(EM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 95 | B.SUGIRTHA | III B.Sc Geo (TM) | I PRIZE |
| 96 | M.AARTHI | III B.Sc Geo (TM) | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 97 | P.ISHWARYA | II M.Sc Geo | I PRIZE |
| 98 | B.GEETHA | II M.Sc Geo | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 99 | M.ABINAYA | III B.Sc Hom. Sci | I PRIZE |
| 100 | V.VAISHALI | III B.Sc Hom. Sci | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 101 | M ANISH FATHIMA | II M.Sc Hom .Sci | I PRIZE |
| 102 | M RASHIHA | II M.Sc Hom .Sci | II PRIZE<br>II PRIZE |

**I Shift**

| | | | |
|---|---|---|---|
| 103 | S.S.UVETHIKADIVYA | III B.Sc Com.Sci | I PRIZE |
| 104 | R.MEHARAJBANU | III B.Sc Com.Sci | II PRIZE |

**II Shift**

| | | | |
|---|---|---|---|
| 105 | M.KALAIYARASI | III B.Sc Com.Sci | I PRIZE |
| 106 | N.SRIBALA | III B.Sc Com.Sci | II PRIZE<br>II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 107 | K.HEMALATHA | II M.Sc Com.Sci | I PRIZE |
| 108 | R.BHARATHI | II M.Sc Com.Sci | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 109 | G.GOPIKA | III BCA | I PRIZE |
| 110 | B PRASANNADEVI | III BCA | II PRIZE |

| | | | |
|---|---|---|---|
| 111 | T.G.VARSHALAKSHMI | II MCA | I PRIZE |
| 112 | K.THILAGAVATHY | II MCA | II PRIZE |

## GENERAL PROFICIENCY PRIZE 2024-2025

| | | | |
|---|---|---|---|
| 113 | ARTS | B.B.A | M.JULIE |
| 114 | SCIENCE | MATHEMATICS | T.SRIPATHI |
| 115 | COMMERCE | COMMERCE | M J JANEESHA |

## Endowment Prizes

I. Prize instituted by Mrs.I.Anis Parvin, Associate Professor and HOD of English(Rtd), SMGC,Madurai in memory of her grandmother, uncle and father respectively.

Janab Pirani Bi Memorial prize to the Outstanding Student in Part– II General English is awarded to

| | | |
|---|---|---|
| 116 | M.VISNUPRIYA | III B.Sc CHEMISTRY Shift I |

Janab C.M.Hussain Memorial Medal to the Best Service Minded Student in B.A English is awarded to

| | | |
|---|---|---|
| 117 | A.ARUNA DEVI | III B .A ENGLISH Shift II |

Janab C.M.Ibrahim Memorial Medal to the Best Student in M.A English is awarded to

| | | |
|---|---|---|
| 118 | S.AAMEENA HABSHA | II M.A ENGLISH |

II. Prize instituted by Mrs.S.IndraPathy, Associate Professor of English(Rtd), SMGC,Madurai in memory of her father S.Srinivasan and mother S.Andal Srinivasan, father-in-law V.Srinivasan and Mother in Law S.Janaki Srinivasan

S.Srinivasan Memorial Prize given to the student scoring the Highest Mark in BA Part II General English is awarded to

| | | |
|---|---|---|
| 119 | S.YUVASRI | III B·A TAMIL Shift I |

S. Andal Srinivasan Memorial Prize given to the student scoring the Highest Mark in B.Sc Part II English is awarded to

| | | |
|---|---|---|
| 120 | M.VISNUPRIYA | III B.Sc CHEMISTRY Shift I |

V.Srinivasan Memorial Prize given to the Best Outstanding Student in B.A.English is awarded to

| | | |
|---|---|---|
| 121 | K.SAMEERA | III BA English Shift I |

S.Janaki Srinivasan Memorial Medal given to the Best Outstanding Student in M.A.English is awarded to

| | | |
|---|---|---|
| 122 | K.NARMADHA | II MA English |

III. Prize instituted by the Department of Zoology,SMGC,Madurai for proficiency in Major Zoology.

| | | |
|---|---|---|
| 123 | G.G.DHARUNIGA | III B.Sc. Zoology (EM) |

Pon.Ravichandran Memorial cash prize instituted by Dr. Mrs.Krishna Ponusamy(Rtd.,) Professor of English ,in memory of her son Er.Pon.Ravichandran.

1. Pon.Ravichandran Memorial Cash Prize for Meritorious Student of B.A English is awarded to

| | | |
|---|---|---|
| 124 | G.ABILASHA | III BA English Shift I |

2. Pon.Ravichandran Memorial cash prize for Meritorious Student of M.A English is awarded to

| | | |
|---|---|---|
| 125 | K.NARMADHA | II M.A English |

3. Pon.Ravichandran Memorial cash prize for Meritorious Student of B.Sc. Computer Science is awarded to

| | | |
|---|---|---|
| 126 | S.LOKHADHARANI | III B.Sc. Computer Science Shift II |

Thiru V.Thangapandian & Tmt.Rajamani Thangapandian Trust Memorial Prize

1. மீனாட்சி கல்லூரியின் ஆங்கிலத்துறையின் முன்னாள் மாணவி முனைவர் தி.சுமதி (எ) தமிழச்சி தங்கப்பாணடியன் MPஅவர்கள் தன் பெற்றோர் நினைவாக நிறுவியுள்ள அறக்கட்டளை பரிசு இளங்கலை மூன்றாமாண்டு சுழற்சி - I ல் பயில்கின்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய கலைத்திறன்மிக்க அதிக மதிப்பெண் பெற்ற கீழ்க்கண்ட மாணவிக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 127 | K.SAMEERA | III B.A English Shift I |

2. மீனாட்சி கல்லூரியின் ஆங்கிலத்துறையின் முன்னாள் மாணவி முனைவர் தி.சுமதி (எ) தமிழச்சி தங்கப்பாண்டியன் MPஅவர்கள் தன் பெற்றோர் நினைவாக நிறுவியுள்ள அறக்கட்டளை பரிசு இளங்கலை மூன்றாமாண்டு சுழற்சி - II ல் பயில்கின்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய கலைத்திறன்மிக்க அதிக மதிப்பெண் பெற்ற கீழ்க்கண்ட மாணவிக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 128 | A.LOGESWARI | III B.A English Shift II |

3. மீனாட்சி கல்லூரியின் ஆங்கிலத்துறையின் முன்னாள் மாணவி முனைவர் தி.சுமதி (எ) தமிழச்சி தங்கப்பாண்டியன் MPஅவர்கள் தன் பெற்றோர் நினைவாக நிறுவியுள்ள அறக்கட்டளை பரிசு முதுகலை இரண்டாமாண்டு பயில்கின்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய கலைத்திறன்மிக்க அதிக மதிப்பெண் பெற்ற கீழ்க்கண்ட மாணவிக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 129 | V.MALATHY | II M.A English |

1. முனைவர்.பொ.இளம்பரிதி நினைவு அறக்கட்டளைப் பரிசு B.A தமிழ் பாடப்பிரிவில் இக்காலத் தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 130 | T.ISHWARYA | B.A TAMIL (2023 - 2024) |

# கவின்மிகு கல்லூரி வளாகம்





